விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 06 வெள்ளிக்கிழமை (22.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 247




## துணுக்காய் சுற்றிவளைப்பு பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பிரதேசத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் முக்கிய தளமாகிய துணுக்காய் நகரப் பகுதியை நேற்று முன்தினம் அதிகாலை முதல் இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தாக்குதல்களை நடத்தி வருவதாகப் பாதுகாப்பு அமைச்சகம் நேற்றுத் தெரிவித்தது.

துணுக்காய் நகரத்தின் வடக்கு மற்றும் மேற்குத் திசைகளில் இருந்து நகர்ந்துள்ள படையினர், புதன் காலை இடம்பெற்ற மோதல்களில் இரண்டு விடுதலைப்புலிகளின் சடலங்களைக் கைப்பற்றியிருப்பதாகவும் மாங்குளம்-வெள்ளாங்குளம் வீதியில் அமைந்துள்ள துணுக்காய் நகர் விடுதலைப்புலிகளின் அதிமுக்கிய இடமாகக் கடந்த 25 வருடங்களாகத் திகழ்ந்து வந்துள்ளது என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தனது இணையத்தள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றது.

விடுதலைப்புலி*(10 ஆம் பக்கம் பார்க்க)*

## சரணடைந்த மேர்வின் சில்வா பிணையில் விடுதலையானார்

(கொழும்பு)

நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றில் சரணடைந்தார்.

செய்தியாளர் ஒருவர் தாக்கப்பட்டது தொடர்பான வழக்கொன்றில் அவர் மீது கடந்த வாரம் இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் நேற்று அவர் சட்டத்தரணியூடாக நீதிமன்றில் சரணடைந்தார். பின்னர் அவர் பிணையில் விடுக்கப்பட்டார்.

இதேவேளை சிரஷ ஊடகவியலாளரின் கமராவைப் பறித்த சம்பவம் தொடர்பான சாட்சியாளர்களை அச்சுறுத்தவோ அழுத்தம் கொடுக்கவோ கூடாது எனவும் எச்சரித்து கடும் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் செல்ல மேலதிக நீதிவான் மஞ்சுள திலகரத்ன அனுமதித்தார்.

இந்த நிபந்தனைகளை மீறியதாக நீதிமன்றத்தில் ஆஜர் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

# வன்னியில் மோதலால் இடம்பெயரும் மக்களுக்கு உடனடி உதவிகள் தேவை

## யாழ்.ஆயர் அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இடம்பெற்று வரும் உக்கிரமான மோதல்களால் வீடுகளை விட்டு வெளியேறி வரும் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான போர் அகதிகளுக்கு உதவுமாறு யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார். *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## திருமலையில் விறகு வெட்டச் சென்ற இரண்டு முஸ்லிம்கள் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் விறகு வெட்டச் சென்று கொண்டிருந்த முஸ்லிம்கள் இருவர் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலை-புல்மோட்டை வீதியில் அமைந்துள்ள நிலாவெளியை அண்டிய காட்டுப் பகுதியில் விறகு வெட்டுவதற்கு உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்தவர்கள் மீது அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர்களின் உடல்கள் திருகோண மலை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசோ *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## இளம் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி இமயாணன் பகுதியில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த நடராஜா மருசன் (வயது-21) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் வீட்டுக்கு வெளியில் சென்று கொண்டிருந்தபோது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாதோர் அவரைச் சுட்டு விட்டுச் சென்றுள்ளதாக விசார *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## எறிகணைத் தாக்குதல்களால் தொடரும் இடம்பெயர்வுகள்

(கிளிநொச்சி)

படையினரின் எறிகணைகள் அக்கராயன்குளம் பகுதிகளில் வீழ்ந்து வருவதால் அப் பகுதிகளில் நிரந்தரமாக வாழும் மக்களும் பல இடங்களிலிருந்தும் இடம்பெயர்ந்து அக்கராயன் பகுதிகளிலும் தங்கியிருந்த மக்களும் தற்போது இடம்பெயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கராயன் பகுதிகளை அண்மித்துள்ள யூனியன்குளம், கோணாவில், முறிப்பு ஆகிய பகுதிகளிலுள்ள மக்களும் தற்போது அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

இப் பகுதிகளிலும் இடம்பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள நிலையில் இடம்பெயர்ந்த மக்களும் மீண்டும் இடம்பெயர நேர்ந்துள்ளது.

இதேவேளை இவ்வாறு அச்சமுறும் மக்கள் தாங்கள் விரும்பும் பகுதிகளுக்குச் செல்ல விரும்பினால் அதற்கான போக்குவரத்து உதவிகளை வழங்கு *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## ஓமந்தையில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

ஓமந்தையில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் ஒன்றுகூடும் தளத்தின் மீது நேற்றுக் காலை 6.30 மணியளவில் விமானப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் அறிவித்துள்ளது.

ஓமந்தையிலிருந்து 7 கிலோமீற்றர் வடமேற்குப் பிரதேசத்திலேயே இந்தத் தளம் அமையப் பெற்றுள்ளது. இத் தாக்குதலுக்கு விமானப் படையின் எம்.ஐ.-24 ரக விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

விமானப் படை *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## கிழக்குப் பல்கலை இறுதி வருட சிங்கள மாணவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள விடுதிக்குள் சென்ற இனந்தெரியாத ஆயுததாரியினரால் வர்த்தக முகாமைத்துவப் பிரிவு இறுதி வருட சிங்கள மாணவன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 9.15 மணியளவில் விடுதிக்குச் சென்ற ஆயுததாரிகள் குருநாகல் மாவட்டம் பொத்துகர எனும் இடத்தைச் சேர்ந்த எச்.எம்.எஸ்.பி.சமரசிங்க (வயது-27) என்ற மாணவன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற ஏறாவூர்ப் பொலிஸார் சடலத்தை மீட்டு ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இச் சம்பவத்தையடுத்து விடுதியிலுள்ள மாணவர்கள் தங்களுக்குரிய பாதுகாப்பு வழங்குமாறு கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேச்சு

வட மாகாண விசேட செயலணிக்குழுத் தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை ஆசிய அபிவிருத்தி வங்கியின் விசேட சமூக மேம்பாட்டுப் பிரதிநிதி அக்ஸல் வெபர் தலைமையிலான பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

சமூக சேவைகள் அமைச்சுப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற இச் சந்திப்பில் வன்னிப் பெருநில மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் தேவைகள் என்பவற்றுடன் வடக்குக் கிழக்கு அபிவிருத்தி, சமூக சேவைகள் அமைச்சினூடாக முன்கொண்டு செல்லப்படும் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் உட்பட பல விடயங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகளுக்கு எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நாட்டு நிலைமைகள் குறித்து விளக்கமளித்த டக்ளஸ் தேவானந்தா, வடக்குக் கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்துள்ளார். (எ)

## நெதர்லாந்து வீரர் தங்கம் வென்றார்.

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த ஆண்களுக்கான 10 கிலோ மீற்றர் மரதன் நீச்சல் போட்டியில் நெதர்லாந்தின் மார்டென் வான் டெர் வெய்ஜ்டன் தங்கம் வென்றார்.

இவரை தொடர்ந்து இங்கிலாந்தின் டேவிட் டேவிஸ் வெள்ளி பதக்கமும் ஜெர்மனியின் தோமஸ் லூர்ஸ் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

### பிரித்தானியாவுக்கு தங்கம்

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த பாய்மரப் படகு (ஸ்டார்) போட்டியில் பிரிட்டனின் இயான் பெர்சி, ஆண்டிரீவ் சிம்ப்சன் தங்கம் வென்றார்.

## கடற்கரை கைப்பந்தில் அமெரிக்கா வெற்றி



பெண்களுக்கான கடற்கரை கைப்பந்து போட்டியில் அமெரிக்க ஜோடி தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது.

பீஜிங் ஒலிம்பிக்கில் கடற்கரை கைப்பந்து போட்டியில் அமெரிக்காவின் மிஸ்டிமே மற்றும் கெரிவொல்ஷ் ஜோடி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இறுதி போட்டியில் இந்த ஜோடி சீனாவின் டியான் ஜியா மற்றும் வாங்ஜி ஜோடியோடு மோதியது.

ஏற்கனவே கடந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்ற அமெரிக்க ஜோடி 21-18, 21-18 எனும் கணக்கில் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது. சீனாவின் ஜாங் சி மற்றும் சென் ஜோடி வெண்கலப்பதக்கத்தை வென்றது. இந்த ஜோடி பிரேஸில் ஜோடியை வீழ்த்தியது.

## 20 கிலோ மீற்றர் நடையில் ரஷ்ய மங்கை தங்கம் வென்றார்



பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான நடைபோட்டியில் ரஷ்ய வீராங்கனை ஓல்கா கனிஷ்கினா தங்கம் வென்றுள்ளார்.

நேற்றுக் காலை மழைக்கு மத்தியில் பெண்களுக்கான 20 கிலோ மீற்றர் நடைபோட்டி நடைபெற்றது.

இதில் ரஷ்ய வீராங்கனை ஓல்கா கனிஷ்கினா தங்கப் பதக்கத்தை வென்றார். அவர் ஒரு மணிநேரம் 26.31 நிமிடங்களில் போட்டித் தூரத்தை கடந்து புதிய ஒலிம்பிக் சாதனை படைத்தார்.

அவரையும் விடவும் 36 விநாடிகள் தாமதமாக போட்டித் தூரத்தை முடித்த நோர்வேயின் கிஜெர்ஸ்டி பிலேட்சர் வெள்ளிப் பதக்கத்தை வென்றார். இத்தாலியின் எலிசா ரிகாடோ வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றிக் கொண்டார்.

பாலா




## ஹொக்கியில் 8-வது இடமே பாகிஸ்தானுக்கு கிடைத்தது

(பீஜிங்)

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த ஆண்களுக்கான ஹொக்கி போட்டியில் 7-வது மற்றும் 8-வது இடத்திற்கான போட்டி நடந்தது.

இதில் பாகிஸ்தான் அணி, நியூசிலாந்து அணியிடம் 2-4 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்து 8-வது இடத்தைப் பிடித்தது.

கடந்த 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் நியூசிலாந்தை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 5-வது இடம் பிடித்த பாகிஸ்தான் அணிக்கு இம்முறை 8-வது இடமே கிடைத்தது.


9-வது மற்றும் 10-வது இடத்திற்கான போட்டியில் பெல்ஜியம், கனடாவை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 9-வது இடத்தைப் பிடித்தது.

### ஸ்பெயினின் எச்சாவரி, பாஸ். தங்கம் வென்றனர்.

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த பாய் மரப் படகு (டொர்னடோ) போட்டியில்ஸ்பெயினின் பொர்னாண்டோ எச்சாவரி, அன்டன் பாஸ் தங்கம் வென்றனர்.

இவர்களை தொடர்ந்து அவுஸ்திரேலிய வீரர்கள் வெள்ளிப் பதக்கமும் ஆர்ஜெண்டினா வீரர்கள் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

## முதல் முறையாக 3 பதக்கம்; இந்தியா வரலாற்று சாதனை



பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு மற்றொரு பதக்க வாய்ப்பு உறுதியாகியுள்ளது.

இந்திய குத்துச்சண்டை வீரர் விஜேந்திர சிங் நேற்று முன்தினம் நடந்த ஒலிம்பிக் காலிறுதிப் போட்டியில் வெற்றி பெற்று பதக்க வாய்ப்பை உறுதி செய்தார்.

ஆண்களுக்கான 75 கிலோக் கிராம் குத்துச் சண்டை போட்டியில் இந்தியாவின் விஜேந்திர சிங்,ஈக்குவடோரின் கார்ல்ஸ் கங்கோராவை காலிறுதிப்போட்டியில் எதிர்கொண்டார்.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆக்ரோஷமாக பங்கேற்ற விஜேந்திர சிங் 2-வது சுற்று இறுதியில் 4-1 என்ற புள்ளி கணக்கில் முன்னிலை வகித்தார்.

இடதுகை அதிரடி குத்துகளால் கார்ல்சை திக்குமுக்காடச் செய்த அவர் வேகமான கால் அசைவுகளின் மூலம் சிறப்பாக செயற்பட்டார்.

இதன்படி மூன்றாவது சுற்றின் முடிவில் 7-2 என முன்னிலையை தக்க வைத்துக் கொண்டார். 4-வது மற்றும் இறுதி சுற்றில் முழு ஆதிக்கத்தை தொடர்ந்த விஜேந்திர சிங் 9-4 என்ற புள்ளிக் கணக்கில் வென்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

இதன் மூலம் இந்தியாவுக்கு 3-வது பதக்கம் கிடைப்பதை உறுதி செய்தார். இன்று நடைபெறும் அரையிறுதியில் அவர் கியூபாவின் எமிலியோ கோரியாவை வெற்றி பெறும் பட்சத்தில் தங்கம் அல்லது வெள்ளி கிடைக்கும்.

ஒருவேளை தோல்வி அடைந்தால் வெண்கலம் கைப்பற்றலாம். ஏற்கனவே இந்திய அணி ஒலிம்பிக் போட்டிகளில் ஒரு தங்கம் மற்றும் ஒரு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு ஒலிம்பிக்கில் இந்தியா இதுவரை 3 பதக்கம் பெற்றது கிடையாது. 1952ஆம் ஆண்டு ஹெல்சிங்கில் நடந்த ஒலிம்பிக்கில் ஹொக்கிப் போட்டியில் தங்கமும் மல்யுத்தத்தில் வெண்கலமுமாக மொத்தம் 2 பதக்கம் கிடைத்தது.

தற்போது 3 பதக்கம் வென்று புதிய சாதனை படைத்துள்ளது.

பீஜிங் ஒலிம்பிக்கில் இந்தியா மிகுந்த முன்னேற்றமடைந்துள்ளது.

ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு இதுவரை 18 பதக்கம் கிடைத்துள்ளது. இதில் 9 தங்கம் (ஹொக்கி 8, துப்பாக்கி சுடுதல்1) அடங்கும்.

## பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 46 | 15 | 22 | 83 |
| அமெரிக்கா | 29 | 34 | 32 | 95 |
| பிரித்தானியா | 17 | 12 | 11 | 40 |
| ரஷ்யா | 16 | 16 | 19 | 51 |
| அவுஸ்திரேலியா | 11 | 13 | 14 | 38 |
| ஜேர்மனி | 11 | 8 | 12 | 31 |
| கொரியா | 10 | 10 | 6 | 26 |
| ஜப்பான் | 9 | 6 | 9 | 24 |
| இத்தாலி | 6 | 7 | 8 | 21 |
| நெதர்லாந்து | 6 | 5 | 4 | 15 |
| உக்ரைன் | 5 | 5 | 9 | 19 |
| ஜமேக்கா | 5 | 3 | 1 | 9 |
| பிரான்ஸ் | 4 | 12 | 14 | 30 |
| ஸ்பெயின் | 4 | 5 | 2 | 11 |
| ரோமேனியா | 4 | 1 | 3 | 8 |
| கனடா | 3 | 7 | 5 | 15 |
| போலந்து | 3 | 4 | 1 | 8 |
| செக்குடியரசு | 3 | 3 | - | 6 |
| நியூசிலாந்து | 3 | 1 | 5 | 9 |
| சுலோவாக்கியா | 3 | 1 | 1 | 5 |
| ஜோர்ஜியா | 3 | - | 3 | 6 |
| கியூபா | 2 | 6 | 6 | 14 |
| கென்யா | 2 | 4 | 2 | 8 |
| பெலாரஸ் | 2 | 3 | 8 | 13 |
| டென்மார்க் | 2 | 1 | 3 | 6 |
| வடகொரியா | 2 | 1 | 3 | 6 |
| எதியோப்பியா | 2 | 1 | - | 3 |
| சுவிட்சர்லாந்து | 2 | - | 3 | 5 |
| கஜகஸ்தான் | 1 | 4 | 5 | 10 |
| நோர்வே | 1 | 3 | 2 | 6 |
| துருக்கி | 1 | 3 | 2 | 6 |
| சிம்பாவே | 1 | 3 | - | 4 |
| பிரேஸில் | 1 | 2 | 5 | 8 |
| அஜர்பைஜான் | 1 | 2 | 3 | 6 |
| உஸ்பெகிஸ்தான் | 1 | 2 | 3 | 6 |
| சுலோவேனியா | 1 | 2 | 2 | 5 |
| பல்கேரியா | 1 | 1 | 3 | 5 |
| இந்தோனேசியா | 1 | 1 | 3 | 5 |
| பின்லாந்து | 1 | 1 | 1 | 3 |
| எஸ்தோனியா | 1 | 1 | - | 2 |
| மொங்கோலியா | 1 | 1 | - | 2 |
| போர்த்துக்கல் | 1 | 1 | - | 2 |
| தாய்லாந்து | 1 | 1 | - | 2 |
| ஆர்ஜென்டீனா | 1 | - | 2 | 3 |
| இந்தியா | 1 | - | 1 | 2 |
| மெக்சிக்கோ | 1 | - | 1 | 2 |
| பஹ்ரெய்ன் | 1 | - | - | 1 |
| கமரூன் | 1 | - | - | 1 |
| பனாமா | 1 | - | - | 1 |
| தனிசியா | 1 | - | - | 1 |
| ஹங்கேரி | - | 4 | 1 | 5 |
| சுவீடன் | - | 4 | 1 | 5 |
| லிதுானியா | - | 2 | 3 | 5 |
| ஆஸ்திரியா | - | 1 | 2 | 3 |
| குரோசியா | - | 1 | 2 | 3 |
| கிரீஸ் | - | 1 | 2 | 3 |
| அல்ஜீரியா | - | 1 | 1 | 2 |
| கொலம்பியா | - | 1 | 1 | 2 |
| கர்கிஸ்தான் | - | 1 | 1 | 2 |
| செர்பியா | - | 1 | 1 | 2 |
| தஜிகிஸ்தான் | - | 1 | 1 | 2 |
| சிலி | - | 1 | - | 1 |
| டமோனிக்கன் | - | 1 | - | 1 |
| ஈகுவடார் | - | 1 | - | 1 |
| மலேசியா | - | 1 | - | 1 |
| தென்னாபிரிக்கா | - | 1 | - | 1 |
| சிங்கப்பூர் | - | 1 | - | 1 |
| ரினிடிடாட் | - | 1 | - | 1 |
| வியட்நாம் | - | 1 | - | 1 |
| ஆர்மேனியா | - | - | 5 | 5 |
| சீனா தைபே | - | - | 4 | 4 |
| ஆப்கானிஸ்தான் | - | - | 1 | 1 |
| பாஹாமஸ் | - | - | 1 | 1 |
| எகிப்து | - | - | 1 | 1 |
| ஈரான் | - | - | 1 | 1 |
| இஸ்ரேல் | - | - | 1 | 1 |
| லற்வியா | - | - | 1 | 1 |
| மொறோக்கோ | - | - | 1 | 1 |
| ருகோ | - | - | 1 | 1 |
| வெனிசூலா | - | - | - | - |

## 400 மீற்றர் ஓட்டத்தில் 3 பதக்கமும் அமெரிக்காவுக்கு



பீஜிங் ஒலிம்பிக்கில் 400 மீற்றர் ஓட்டப் பந்தய ஆண்கள் பிரிவில் 3 பதக்கங்களையும் அமெரிக்கர்கள் வென்றனர்.

இதில் அமெரிக்க வீரர்களான லீ ஷோன் மெரிட் போட்டித் தூரத்தை 43.75 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கத்தையும் ஜேர்மி வொரினர் 44.74 வினாடிகளில் தூரத்தை கடந்து வெள்ளிப் பதக்கத்தையும் 44.80 வினாடிகளில் ஓடி முடித்த டேவிட் நீவில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இதன் மூலம் 400 மீற்றர் ஓட்டத்தில் 3 பதக்கங்களையும் அமெரிக்க வீரர்களே சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்று ஒரு தகவல்

## பணமும் குணமும்

இந்த உலகத்தில் பணமா? குணமா? பெரியது என்று கேட்டால் உடனே எல்லோரும் சொல்லும் பதில்: "பணம் என்ன பணம்... அது இன்றைக்கு வரும் நாளைக்குப் போகும்... குணம் தான் பெரியது" என்பார்கள்.

இப்படிப் பேசிக்கொள்வதால் நாம் ஒரு பெரிய தவறு செய்கிறோம்! அதாவது பணத்தையும் குணத்தையும் சம்பந்தப்படுத்துவதே ஒரு பெரிய தவறு.

ஏனெனில், குணம் என்பது நமக்குள்ளிருக்கும் ஒரு விஷயம் பணம் என்பது நம் உடம்புக்கு வெளியே இருக்கும் விஷயம்.

"பணம்" என்பது ஏதோ நமக்கு வேண்டாத ஒன்று... செல்வம் சேர்ப்பது பாவகாரியம் என்பது போல் சிலபேர் தத்துவம் பேசுவார்கள். இதெல்லாம் அர்த்தமில்லாத தத்துவம் என்கிறார் ஒரு பெரியவர் (ரஜனீஷ்) இந்த உலகத்தில் நாம் நல்லபடியாக வாழவேண்டுமானால் அதற்கு முக்கியமாக பணம் தேவை!

"பணத்தில் ஆசைவைக்காதீர்கள்... எளிய வாழ்க்கை வாழுங்கள்... அதுதான் உன்னதமான வாழ்க்கை!" என்று சொல்லி சிலபேர் வறுமையை உன்னதப்படுத்தி விடுகிறார்கள்... அது மிகத் தவறான ஒரு தத்துவம்.

"முறையான வழியில் பணத்தைச் சம்பாதியுங்கள் செல்வத்தைச் சேருங்கள்... நீங்களும் செழிப்பாக வாழ்வதன் மூலம் இந்த நாட்டையும் செழிப்பானதாக ஆக்குங்கள்!" என்று சொல்வது தான் நியாயம்.

அதை விட்டுவிட்டு சுலபமான வழியாக வறுமையை உன்னதப்படுத்தி விடுகிறோம். வறுமையை பெருமையாக சொல்லும் பழக்கமும் நம்மிடம் உண்டு; "அவர்கள் இன்னும் குடிசை வீட்டில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!" என்பது ஒரு பெருமையா?

ஒவ்வொருவரும் அவர்களது வாழ்க்கையை எப்பொழுதும் உற்சாகமாக வைத்துக்கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான செல்வத்தைத் திரட்ட வேண்டும். அதை விட்டு விட்டு எளிமையாக இருங்க என்று சொல்லி வறுமையை ஒரு பெருமையான விடயமாக எண்ணிக் கொள்வது மிகவும் வேதனையான விடயம்.

வறுமையை உன்னதம் ஆக்குபவர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? செல்வத்தையும்... செல்வம் சேர்க்க உழைப்பதையும் ஏதோ ஒரு பாவகாரியம் மாதிரி பேசுகிறார்கள்.

பசியுடன் இருப்பவன் அடுத்தவேளை உணவைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருப்பான். இப்பொழுது நாம் சாப்பிடுவதற்கு என்ன வழி என்பதில்தான் அவனுடைய மனமும் ஆத்மாவும் இருக்கும்.

உடம்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய அளவுக்கு செல்வத்தை முதலில் சேர்த்துவைக்க வேண்டும். அதன் பின்னர் தான் "நான் யார்?" என்று உங்களுக்குள் தேடிப்போக முடியும். பசியால் துடித்துக் கொண்டிருப்பவனைப்பார்த்து, "நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டால்,

"நான் இப்பொழுது என் உள் ஒளியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றா சொல்லுவான்? "வயிற்றுக்கு ஏதாவது வழி இருந்தால் சொல்!" என்பான். அதனால் புற விவகாரத்தையும் அகவிவகாரத்தையும் சம்பந்தப் படுத்தக்கூடாது.

பணத்தை தானம் செய்தால் சொர்க்கம் கிடைக்குமா? கிடைக்காது! பணம் புறவிவகாரம்! மதம், சொர்க்கம் இதெல்லாம் அக விவகாரங்கள். பணத்தைக் கொடுத்து சொர்க்கத்தை வாங்கிவிட முடியாது என்பதற்கு ஒரு கதை உண்டு. வசதியான ஆள் ஒருவன் இருந்தான். ஆனால் அவன் மகா கஞ்சன்.

ஒருநாள் செத்துப்போனான். உடனே சொர்க்கத்தின் வாசலில் போய்நின்றான். அங்கே நின்றிருந்த சித்ரகுப்தனிடம், பத்து ரூபாயைக் கொடுத்து "இந்தா இதை வைத்துக்கொள்... கதவைத் திறந்துவிடு" என்றான். சித்ரகுப்தன் சிரித்துக்கொண்டே "இதெல்லாம் பூலோக நடைமுறைகள் அந்த வழிமுறைகலெல்லாம் இங்கு எடுபடாது. சொர்க்கத்தில் நுழைய தகுதி பெறும் அளவிற்கு நீ யாருக்கு என்ன நன்மை செய்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

இவன் யோசித்துப் பார்த்துவிட்டு, "ஒரு நாள் ஒரு கிழவிக்கு 10 காசும், ஒரு அநாதை சிறுவனுக்கு 5 காசும் தானம் கொடுத்திருக்கிறேன்" என்றான். உடனே சித்ரகுப்தன் தன்பக்கத்திலிருந்தவனிடம் யோசனை கேட்டான். அதற்கு "அந்த 15 காசை இப்பொழுது இவனிடம் திரும்பிக் கொடுத்துவிட்டு இவனை நரகத்திற்கே அனுப்பி வைத்துவிடலாம்!" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வன்முறைகளற்ற தேர்தலை நடாத்த நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை

## தேர்தல் ஆணையாளரிடம் சர்வமத தலைவர்கள்

நாளை நடைபெறவுள்ள வடமத்திய, சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தல்களை சுதந்திர மானதும் நியாயமானதுமான முறையிலும் வன்முறைகளற்ற தேர்தலாக நடத்தி முடிப்பதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சர்வமத தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் திணைக் களத்தில் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவை சந்தித்து கலந்து ரையாடிய போது அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். இந்த சந்திப்பின் போது இத்தபானதம்மா லங்க தேரர், பரஹாமன்வத், சில்வ தேரர், மதுலுவாவ சோபித்த தேரர் , பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆகிய மதத் தலைவர்களே இந்த சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

தேர்தல்கள் ஆணையாளருடனான சந்திப்பு தொடர்பாக சர்வமதத் தலைவர்கள்கருத்துத் தெரிவிக்கையில்,

வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்களிப்புக்கு இன்னும் சில தினங்கள் இருக்கின்ற நிலையில் இருமாகாணங் களிலும் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான வன் முறைச்சம்பவங்கள் நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் நடை பெறுவதைப் பெரிதும் பாதிக்கும் என்பதனால் வன்முறை களற்ற தேர்தலை இரு மாகாணங்களிலும் நடத்திமுடிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டுள்ளோம் என்றனர். (ஓ-6)

# தேர்தல் கண்காணிப்பு பணிகளில் சட்டத்தரணிகளை ஈடுபடுத்த நடவடிக்கை

நாளை நடைபெறவுள்ள வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் கண்காணிப்பு பணிகளில் சட்டத்தரணிகள் 100பேர் ஈடுபடவுள்ளனர். இரு மாகாணங்களிலும் அனுராதபுரம், பொலநறுவை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலேயே சட்டத்தரணிகள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

வடமத்திய சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலை கண்காணிக்கும் பணியில்ஈடுபட்டுள்ள தேசிய தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் மூலமாக சட்டத் தரணிகள் கண்காணிப்புப்பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று மத்திய நிலையத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அதிகரித்து செல்கின்ற தேர்தல் வன்முறைகளை கருத்தில் கொண்டேதேர்தல் கண்காணிப்பு பணிகளில் சட்டத்தரணிகளை ஈடுபடுத்துவதற்குநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

# புலிகளின் மௌனம் நல்லதாக அமையாது கடுமையான பதில் தாக்குதல்கள் நடத்தக்கூடும்

## அரசியல் ஆய்வாளர் தெரிவிப்பு

வடக்கைக் கைப்பற்றும் நோக்கில் இலங்கை அரசாங்கப் படைகள் முன்னெடுத்திருக்கும் இராணுவ முன்நகர்வுகள் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் ஆரம்ப மாகும் பருவப்பெயர்ச்சி மழையால் தடைப்படு வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அரசியல் ஆய்வாளர், முன்னாள் கேணல் சுசந்த செனவிரட்ன ஏ.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது முன்னெடுத்திருக்கும் இராணுவ முன்நகர்வானது கிழக்கைப் போன்று இலகுவானதாக அமைந்திருக்காதெனவும், கூடுதலான நிலக்கண்ணிவெடிகள் புதைத்து வைத்திருக்கக் கூடும் என்பதால் சிக்கல் நிறைந்த முன்நகர்வாக அமையும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.


அண்மைய மோதல்களில் விடுதலைப் புலிகள் உடனடியாக பின்வாங்கிச் செல்கின்றமை, இராணுவத்தினரைக் கவரும் நிகழ்ச்சியாக அமைந்திருக்கலாம் என ஏ.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்திருக்கும் செனவிரட்ன, காடுகளுக்குள் பதுங்கியிருக்கும் விடுதலைப் புலிகள் இன்னமும் தம்வசம் ஆட்லறி மற்றும் கனரக ஆயுதங்களை வைத்திருப்பதால், கடுமையான பதில் தாக்குதல்களை நடத்தக்கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மௌனம் படையினருக்கு நல்லதாக அமையாது என செனவிரட்ன கூறியுள்ளார். அண்மைய இராணுவ முன்நகர்வுகள் விடுதலைப் புலிகளைப் பலவீன மடையச் செய்துள்ளபோதும் இனப் பிரச்சினை மோதல்கள் மூலம் தீர்க்கப்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

உடனடியாகவோ அல்லது ஆறுதலாகவோ பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றுக்குநாங்கள் செல்ல வேண்டியே இருக்கும் என அரசியல் ஆய்வாளர், முன்னாள் கேணல் சுசந்த செனவிரட்ன ஏ.பி. செய்திச் சேவைக்கு மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தின் வடமேல் பகுதியில் எட்டு மைல் விவசாய நிலங்களை அண்மித்திருப்பதால் அவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இராணுவ முன்நகர்வுகளை மெதுவாக்கியிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்திருப்பதாக ஏ.பி. செய்திச்சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிய இராணுவ முன்நகர்வை மேற்கொள்வதற்கு இராணுவத்தினர் இரவுவேளைகளில் போராட வேண்டி இருப்பதாகவும், இரவுவேளைகளிலேயே விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகளைக் கைப் பற்றி அவற்றை ஒழிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பிரிகேடியர் கூறியுள்ளார்.



வடமராட்சி வலயக்கல்வி அலுவலக நலன்புரிச் சங்கத்தால் நடாத்தப்பட்ட சேவைநலன் பாராட்டுவிழாவில் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் ஏற்புரை வழங்குவதையும் பதவியுயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி கி.வாசுதேவன், க.குகநாதன், ச.சந்திரயோகன் சிவராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

## இராசி பலன்

22.08.2008
(ஆவணி 06 வெள்ளிக்கிழமை)
ஷஷ்டி முன்னிரவு 08.44மணிவரை
அச்சுவினி பிற்பகல் 01.37 மணிவரை
இராகுகாலம்-10.35-12.05மணிவரை
சுபநேரம்-06.05-07.35 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், சிந்தனை மிகுதி, தெய்வதரிசனம், விருந்துபசாரம். |
| இடபம் | காரிய அலைச்சல், சோம்பல் நிலை, பிதாசிந்தை, தனவிரயம். |
| மிதுனம் | தெய்வதரிசனம், தொழில் வருமானம், கரிய அனுகூலம், உடல் நலம். |
| கடகம் | ஆரோக்கியமான நிலை, நன்கொடை, எடுத்தகாரியம் கைகூடும், மேன்மை. |
| சிங்கம் | தேகாந்திரவாசம், உத்தியோக பங்கம், வீண்பயம், முயற்சிதாமதம். |
| கன்னி | மனக்கவலை, பிரயாணபயம், திடீர் நன்மை, போசனசுகம். |
| துலாம் | மனோதைரியம், கீர்த்தி, தேக நலன், தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | சுவாரஸ்யம், சத்துருஜெயம், முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |
| தனுசு | வியாபாரநன்மை, அஜீரண ரோகம், குடும்பக்கவலை, முயற்சி தாமதம். |
| மகரம் | தன்னம்பிக்கைக்குறைவு, பெரியோர் உதவி, தனவிரயம், தெய்வசிந்தை. |
| கும்பம் | நற்கீர்த்தி, அனுகூலம், தெய்வ தரிசனம், பிரயாண நன்மை. |
| மீனம் | மனோசங்கடம், போசனசுகக் குறைவு, தனவிரயம். |

வளவன்

# இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கான தடைகளை நீக்க வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள்

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெறும் மோதல்கள் காரணமாக, வன்னியில் இடம்பெயர்ந்திருக்கின்ற ஆயிரக்கணக்கான மக்கள் உணவுப் பற்றாக்குறை மற்றும் கூடாரங்களின்றி பெரும் கஷ்டங்களுக்கு முகங்கொடுத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் இடம். பெயர்ந்துள்ள பெண்களும், யுவதிகளும் பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாகி வருவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளுக்கும், இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் பகுதிகளுக்கும் ஊடகவியலாளர்கள் செல்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், சிறியளவு நம்பகரமான தகவல்கள் அங்கிருந்து கிடைத்துள்ளதாகவும் மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மோதலில் ஈடுபட்டுள்ள இருசாராரும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியேறியுள்ள மக்களை அரசாங்கம் தற்காலிக கூடாரங்களிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் தங்கவைத்துள்ளதாகவும் மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள் ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள களிமோட்டை முகாமில் இருநூறு குடும்பங்கள் தங்கியிருப்பதாக நேரில் கண்ட சாட்சிகள் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் பாடசாலைக்குச் செல்வோரைத் தவிர வேறெவரும் பண்டயினரின் விசேட அனுமதியின்றி வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் பாதுகாப்பான இடங் களை நோக்கிச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை இருசாராரும் நீக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள மன்னிப்புச் சபை இடம் பெயர்ந்த மக்கள் மோதல்களுக்கு மத்தியில் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்குவதற்கான 3 பெரிய தங்குமிடங்கள் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் ஓமந்தை சோதனைச் சாவடியூடாக மனிதாபிமான உதவிகள் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப் படல் வேண்டும் எனவும் மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 14ஆயிரம் குடும்பங்கள் புதிதாக இடம்பெயர்ந்துள்ளதாகவும், அரசாங்க தரவுகளின்படி ஓகஸ்ட் 7ஆம் திகதி வரை மொத்தமாக இடம்பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை 1இலட்சத்து 50 ஆயிரம் முதல் 1இலட்சத்து 60ஆயிரம் வரை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ஓ)

# யுத்தம் இன்று நாட்டில் பாரிய வியாபாரமாக மாறியுள்ளது

## ரணில் கவலை



யுத்தம் இன்று பாரிய வியாபாரமாக இலங்கையில் மாறியுள்ளது. யுத்தத்தை தொடர்வதற்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த கோருகிறார்.யுத்தம் வியாபாரமாக பரிணமிக்கும் பட்சத்தில் மக்களின் நலன் குறித்து எவரும் சிந்திக்கமுடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யுத்தத்திற்காக அரசாங்கமும் பசி பட்டினியின்றி மீண்டு நிம்மதியான சூழ்நிலையை ஏற்படுத்த நாமும் வாக்கு கோருகிறோம். மக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். இரத்தின்புரி நகரில் நடைபெற்ற ஐக்கியதேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது. ஐ.ம.சு.மு.இலகுவாக வெற்றி கொள்ளலாம் என்றே மாகாண சபைகளை கலைத்தது அந்த வெற்றி தற்போது ஐ.தே.க வசமானது.

தேசிய மட்டத்தில் சகோதர கம்பனிகளான ரீராஜபக்ஷ கம்பனிகள் குடும்ப ஆட்சி மூலம் பல்வேறு மோசடிகளை மேற் கொண்டு வருகின்றது.

இது கிராமமட்டத்திலும் மாகாண சபை மட்டத்திலும் வியாபிக்கவேண்டும் என்பதற்காகவே தான் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் குடும்ப வாரிசுகளை நிறுத்தியுள்ளன.

தனிக்கம்பனி,தனிக்குடும்பம் கொள்ளையிட்டது.

தற்போது பல குடும்பங்கள் பகிர்ந்து கொள்ளலாம் என கனவு கண்டனர். அதனை இன்றைய மக்கள் கூட்டம் தகர்த்துவிட்டது. ஒவ்வொரு அபிவிருத்தி வேலைக்கும் 10சதவீத கமிஷன் கேட்கும் அரசியல்வாதிகளே ஆட்சிசெய்தனர்.

அது சப்ரகமுவ,வடமத்திய மாகாணத் தேர்தலின் பின்னர் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

*மக்கள் அடிப்படைவசதிகள் எதுவுமின்றி அல்லல்படுகின்றனர். ஆனால், அரசியல்வாதிகள் சுகபோகங்களை அனுப விக்கின்றனர்.*

மக்களின் வரிப்பணம் இன்று அரசியல் தலைவர்களின் சுகபோகங்களுக்காக செலவிடப்படுகின்றது. (ஓ)


**நல்லூர்க் கந்தன் திருவிழாக் கோலத்தைத் தரிசிக்கும் வைதீக சைவத் தமிழ்ச் சான்றோர்களே ! கல்லூரி அதிபர்களே !**

**சைவத்தமிழ் கல்விஞானம் கற்க உதவும் நூல்**

**உவமையிலாக் கலைஞானம்**

**ஆக்கம் சைவப்புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு**

தற்பொழுது யாழ். நகர பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. நல்லூர்க் கோயிற் திருவிழாக் காலங்களில் சிவன் கோயில் வீதியில் அமைந்த பூபாலசிங்கம் புத்தக சாலையிலும் விற்பனையாகின்றது. சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.உங்கள் இல்லத்தில் உள்ள நூலகத்திலும்,பாடசாலை நூலகத்திலும் சனசமூக/பொது நூல் நிலையங்களிலும் இதனை வைத்து சைவத்தமிழ் வளர்க்க உதவுங்கள்.

அன்பளிப்பாக பெறவிரும்பும் அறிஞர்கள் பழனியானந்த இல்லம், சித்திரமேழி இளவாலை என்னும் விலாசத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

**இந்நூல் பற்றிய தலைப்புரைகள்**

**1.நல்லை திருஞானசம்பந்த ஆதின 2ஆம் குருமஹா சந்நிதானம்**

நம் சமயத்தின் பழமையைப் பேணும் வகையில் புராண இதிகாசங்களின் தத்துவத்தை இன்றைய மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் எளிய முறையில் வெளிவருவதும், ஆலய வழிபாடு, சமயக்கிரியைகள், சிவபூசைத் தத்துவங்கள், குரு இலட்சணம், ஆச்சாரிய இலட்சணம் இன்னும் பல விடயங்கள் எளியமுறையில் தருவது மகிழ்ச்சி.

**2.இந்துசமயப் பேராசிரியர் வ. கோபாலகிருஷ்ணஐயர்**

இந்நூல் சைவ வாழ்வு, சமூக வாழ்வு, செந்தமிழின் சிறப்பு, வைதீக சைவச் சங்கத்தின் செயற்பாடுகள் தெளிவுபட விளக்கியுள்ளார்.

**3.விஞ்ஞானப் பேராசிரியர் க. கந்தசாமி, பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம். யாழ். பல்கலைக்கழகம்.**

இந்த நூலைப் படித்தபோது நீண்ட கால ஆன்மீக அனுபவத்தைப் பெற்றேன். சமயமும், கோவிலும், மதமும், ஆலயமும் என்ற தலைப்பில் சமயம், மதம் சார்ந்த சிந்தனைகள், தத்துவங்கள், வாழ்வியற் கோலங்கள் மிகச்சிறப்பாக தந்திருக்கின்றார்.

**4. பேராசிரியர் க. தவராஜா, பீடாதிபதி, முகாமைத்துவ வணிக பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.**

கலைஞானம் பற்றிய அடிப்படைச் சிந்தனைகள் எவ்வாறு வாழ்வியற் கோலங்களாக அமைந்துள்ளன என எடுத்துரைப்பது அவருக்கே உரிய பாணியாகும். தனிமனித நாட்டங்களுக்கு மதிப்பளிக்கும் வணிக தத்துவத்தை சமய அறிவுடன் தொடர்புபடுத்தி தத்துவங்களின் பெருமைகளை விளக்குவதாக இவரது நூல் அமைக்கப்பட்டுளது.

**5.சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் மு.திருஞானசம்பந்தபிள்ளை ,தலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.**

ஓர் பத்திரிகை ஆசிரியர் போல தமது நேர்காணல் உத்தியை வைதீக செந்தமிழ்ச் சங்க நுதலிய பொருட்களை வருங்காலச் சமூகத்திற்கு அளிக்க *உவமையிலாக் கலைஞானம்* என்ற நூலை வெளியிடுகின்றார்.

**6. பேராசிரியர் நா. சண்முகலிங்கன், துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.**

ஓர் மாணவனின் கல்வி வளர்ச்சிக்கு நல்ல நூல்களைக் கொண்ட நூல்நிலையம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது அவசியமாகும். பழைய காலத்து நூல்களை இக்காலத்தில் பெறுவது மிகவும் கஷ்டமாகும். இதுபோன்ற நூல்கள் அத்தகைய நூல்களுக்குப் பிரதியீடாக அமைகிறது.

(1619)



**வைத்திய நிபுணர் உமாபதி அவர்களுக்கு எனது பாராட்டும் நன்றியறிதலும்**

நான் ஒரு வயது முதிர்ந்த நோயாளி. முள்ளந்தண்டில் சத்திர சிகிச்சை செய்ய வாட் இல.17இல் (பதினேழு) அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றேன்.

காலை 6.30மணிக்கு சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி உமாபதி அவர்கள் வாட்டிற்கு வருகை தந்தார். சகல அலுவலகர்களும் தத்தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றிக்கொண்டிருந்தனர். சத்திர சிகிச்சை நிபுணர் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும்,கருணை காட்ட வேண்டிய இடத்தில் கருணை காட்டியும் நிர்வாக ஒழுங்குகளைச் சிறப்புற நடத்திக் கொண்டிருந்தார். நோயாளிகளிடம் மிகவும் இரக்க சுபாவத்துடன் கதைத்தும், தான் கூறிய படி நடக்காதவர்கட்கு நல்ல அறிவுரை புகட்டியும் நடந்து கொள்கின்ற தன்மை மிகவும் போற்றுதற்குரியதாகும். இவருக்கு உதவியாக இருந்து உதவுகின்ற வைத்தியர்கள் இச் சத்திர சிகிச்சை நிபுணரின் நோக்கங்களை நிறைவேற்றுகின்ற தன்மையுடன் நடந்து கொள்வதை அவதானிக்க முடிந்தது.

எனது காலின் நரம்பிற்கு முதலிலும் அதனைத் தொடர்ந்து முள்ளந்தண்டு நரம்பு ஆகியவற்றிலும் சத்திர சிகிச்சை செய்யவேண்டி ஏற்பட்டது. நான் மிகவும் பயந்து கொண்டு சத்திர சிகிச்சைக்குச் சென்ற போது எனது மனதைத் தென்படையச் செய்து சத்திர சிகிச்சையில் வெற்றிகண்டார் சத்திரசிகிச்சை நிபுணர். தற்போது நான் மிகவும் சுலபமாக நடக்கின்றேன்.

அவர் எனக்கு என் மகன் போலவே சேவை செய்தார். எனக்கு மட்டுமல்ல எல்லா நோயாளிகளுக்கும் அவர் அப்படித்தான் சேவைசெய்து வருகின்றார்.

எனக்கு சத்திர சிகிச்சை செய்ய என்னை இரண்டு முறை சத்திர சிகிச்சை அறைக்குக் கொண்டு போய் அங்கு என் மனநிலை காரணமாக எனக்கு ஆஸ்மா ஏற்பட இரு முறையும் அவர் எனக்கு தென்பூட்டி பயப்பட வேண்டாம் எனக்கூறி நோய் மாற மீண்டும் பொறுமையுடன் மூன்றாவது முறை சத்திர சிகிச்சைக்கு எடுத்து என் மனநிலையை உணர்ந்து, எனக்கு தென்பூட்டி, பயம் போக்கி எனது முள்ளந்தண்டு சத்திர சிகிச்சையை மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளார். இந்தச் சத்திர சிகிச்சையைச் செய்ய வேண்டாம், பயங்கரமானது என சிலர் தடுத்தும் நான் அவர் மீது வைத்த அசையாத நம்பிக்கையும், அவரின் அன்பான சேவையும் தான் என்னை இன்று நடக்கக் கூடிய நிலையில் கொண்டு வந்துள்ளது. அவரின் அன்பான சேவையைப் பாராட்டுவதுடன் அவருக்கு எல்லாம் வல்ல விநாயகர் அருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்தித்து, எனது அன்பார்ந்த நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல எனக்கு சத்திரசிகிச்சைக்கு முன் மேலதிக பரிசோதனை செய்யவேண்டுமென 2ஆம் ( இரண்டாம்) வாட்டுக்கு வைத்திய கலாநிதி பேரானந்தராஜா அவர்களிடம் வைத்திய கலாநிதி உமாபதி அவர்கள் அனுப்பிய போது அவரும் அன்பாக எனக்குச் செய்ய வேண்டிய பரிசோதனைகளை தாமதமின்றி செய்து, என்னை சத்திரசிகிச்சைக்கு ஆயத்தப்படுத்தி விட்டமைக்கு வைத்திய கலாநிதி பேரானந்தராஜா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனக்கு நல்ல முறையில் சத்திர சிகிச்சை நடைபெற உதவிய 17ஆம் (பதினேழாம்),2ஆம் (இரண்டாம்) வாட் ஆகியவற்றில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கும் தாதிமார்களுக்கும் சிற்றூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாண மக்களுக்கு இத்தகைய நிபுணர்கள் ஆற்றும் அரிய சேவைகள் கிடைத்தற்கரிய வரப்பிரசாதமாகும் .இவ்விரு வாட்டுக்களின் தன்மைகளை அறியும் நான் மற்றைய வாட்டுக்களிலும் சேவையாற்றுகின்ற சத்திர சிகிச்சை நிபுணர்கள், வைத்திய நிபுணர்கள் மற்றும் அங்கெல்லாம் சேவையாற்றுகின்ற மற்றும் அலுவலர்கள் யாவரும் உத்தம சேவையாளர்களாகவே இருப்பர் என உணர்கின்றேன்.

இவற்றுக்கெல்லாம் காரணமாயிருக்கின்ற யாழ். போதனா வைத்தியசாலையின் மேல் மட்ட நிர்வாகத்தையும் அவர்களின் சேவையையும் நாம் பாராட்டாது இருக்க முடியாது.

எல்லாவற்றிற்கும் மேலாக யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழ்நிலையில் கொழும்பு சென்று இவ்வரிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் இவற்றுக்கான செலவுகள் , இடர்பாடுகளின் மத்தியில் இந் நிபுணர்களின், இச் சேவையாளர்களின் அளப்பரிய சேவை எம் மக்களுக்குக் கிடைத்திருக்கின்றமை பெரும் வரப்பிரசாதமே. இச் சேவைகள் தொடர்ந்தும் யாழ்ப்பாண மண்ணில் நிலை பெற, இவர்கட்கு நல்ல ஆரோக்கியத்தையும், ஆத்ம திருப்தியையும் வழங்கவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

66,கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

நன்றி- திருமதி நாகேஸ்வரி சிவப்பிரகாசம்
சிகிச்சை பெற்றுவரும் நோயாளி
17ம் வாட்

(1618)

## வடக்கு மாகாண பாடசாலை மட்ட விளையாட்டுப்போட்டி

# வலைபந்தாட்டம், உதைபந்தாட்டத்தில் யாழ்.அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி

(வவுனியா)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டப் போட்டியில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டம், வலைபந்தாட்ட தகுதிச் சுற்றுப்போட்டிகளில் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளன.

இப்போட்டிகளின் இறுதிப்போட்டிகள், மூன்றாமிடத்துக்கான போட்டிகள்இன்று நடைபெறுகின்றன.

இன்று மோதும் அணிகளின் விபரம் வருமாறு,

உதைபந்தாட்டம்

*17 வயதுப் பிரிவு-இறுதிப்போட்டி* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மன்னார் சென். சேவியர் கல்லூரி

*மூன்றாமிடத்துக்கான போட்டி*

வவுனியா பூவரசம் குளம் ம.வி எதிர் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி.

*19 வயதுப் பிரிவு- இறுதிப்போட்டி* அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் மன்னார் சென்.சேவியர் கல்லூரி.

*மூன்றாமிடத்துக்கான போட்டி*

வவுனியா நெடுங்குளம் கலைமகள் ம.வி.எதிர் மன்னார் சென்.சேவியர் ம.வி.

**வலைபந்தாட்டம்.**

*15 வயதுப் பிரிவு -இறுதிப்போட்டி*

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் வவு.றம்பைக்குளம் பெண்கள் ம.வி.

*மூன்றாமிடத்துக்கர்ன போட்டி*

வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி எதிர் மன்னார் யூசியா ம.வி.

*17வயதுப்பிரிவு- இறுதிப்போட்டி*

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி எதிர் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி.

*மூன்றாமிடத்துக்கான போட்டி*

வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி எதிர் வவு.பெரிய கோமரசன் குளம் ம.வி.

*19 வயதுப் பிரிவு- இறுதிப்போட்டி*

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

*மூன்றாமிடத்துக்கான போட்டி*

மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி எதிர் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி.

இதில் உதைபந்தாட்டப் போட்டிகள் வவுனியா நகர சபை மைதானத்திலும் வலைபந்தாட்டப் போட்டிகள் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலும் நடைபெறும் என வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற் கல்வி) எஸ்.சத்தியபாலன் தெரிவித்தார்.(ச-5)

# வடக்கின் பிரதம செயலாளர் ஞாயிறன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சித்த மருத்துவத் துறையின் அபிவிருத்தி, ஓய்வூதியர்களின் பிரச்சினை தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வரும் பிரதம செயலாளர் யாழ்.மாவட்டத்தில் சித்த மருத்துவத்துறையின் வளர்ச்சி குறித்து பயிற்சிப் பாசறையொன்றை நடாத்தவுள்ளார்.

அத்துடன் நீண்டகாலமாக ஓய்வூதியம் வழங்கப்படாமலுள்ள 800க்கும் மேற்பட்ட அரச ஊழியர்களின் பிரச்சினையைத் தீர்த்துவ்வப்பதற்காக ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகளுடன் வடமராட்சியில் ஒரு நாளும் யாழ்ப்பாணத்தில் இரு நாட்களும் நடமாடும் சேவை ஒன்றையும் நடாத்தவுள்ளார்.

தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா நேரடியாக விஜயம் செய்யவுள்ளார். (ச-5)

# பரிசில் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வள்ளுவர் அக்கடமியின் பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு நிறுவன அரங்கில் இயக்குநர் இ.எ.ஜெயன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க.தேவராஜா கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக வலம்புரியின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் கலந்து கொள்கிறார்

(ச)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(கோண்டாவில்)

கோண்டாவில் அம்பிகை முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை பிற்பகல் ஒரு மணிக்கு கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் சு.இராசலிங்கம் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலய ஓய்வு பெற்ற ஆரம்பக் கல்வி ஆலோசகர் திருமதி பிரகதீஸ்வரசர்மா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் செல்வி மலர் சின்னையா, பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஷ்சந்திரன், நல்லூர் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி விவேகானந்தன் மாலதிதேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-3)

# தமிழ் உலகிற்கு பெருமை சேர்த்த கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி

**மி**கவும் புகழ்பெற்ற குடும்பத்தில் மானிப்பாய் சேர் முத்துக் குமாரசாமிக்கும் எலிசபத் பீ.பீக்கும் ஒரே மகனாக ஆனந்தாகென்ரிஸ் குமாரசுவாமி 1877ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி பிறந்தார்.இவரது பாட்டனார் குமாரசாமி முதலியார் மைத்துனர்களாகிய சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் ஆகியோரும் இலங்கை மக்களின் ஒற்றுமைக்கும் சுதந்திரத்துக்கும் வித்திட்டவர்கள் .

சேர்.முத்துக்குமாரசுவாமியும் சட்ட நிருபண சபை அங்கத்தவராக செயல்பட்டு எம் பெருமையை நிலை நாட்டியவர்.

தந்தையார் சேர் முத்துக்குமாரசாமி கடும் சுகவீன காரணமாக 46ஆவது வயதில் 1879ஆண்டு மரணமடைந்தார். இதனால் ஆனந்த குமாரசுவாமியையும் கூட்டிக்கொண்டு தாயார் இங்கிலாந்து சென்றுவாழ நேரிட்டது.

ஆனந்தகுமாரசுவாமி 1889ஆம் ஆண்டு அதாவது 12ஆம் வயதில் விக்லிவ் (Wyeliffe)கலாசாலையில் சேர்க்கப்பட்டார்.

தாயாரின் தூண்டுதலால் கிரேக்கம், லத்தீன் போன்ற பல மொழிகளையும் கற்றார். பிற்காலத்தில் மெஞ்ஞானம் பற்றி ஆய்வுகளுக்கு இப் பாஷைகள் கைகொடுத்தன .

கற்கும் காலத்தில் உணவுக்காக மிருகங்களைக் கொல்வதையும் கண்டித்தார். 1894 இல் லண்டன் மெற்றிக்குலேஷன் பரீட்சையில் முதலாவதாகத் தேறினார். சில காலம் இலங்கை வந்த குமாரசுவாமி மீண்டும் விக்லிவ் கல்லூரியில் சேர்ந்து இன்டர் சயன்ஸ் கற்றார். இக் காலத்தில் பல தங்க, வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றதோடு தாவர சாஸ்திரத்திலும் திறமைச் சித்தி பெற்றார்.

பின் பி.எஸ் சி.படிக்கும் போதே தாவர சாஸ்திரத்துக்குரிய பரிசைப் பெற்றார். 1900ஆம் ஆண்டு பி.எஸ். சி. முதல் பிரிவில் சித்தியடைந்ததுடன் சர்வகலாசாலையில் அங்கத்தவராகவும் இணைக்கப்பட்டார்.

இக்காலகட்டத்தில் இலங்கையில் கனிப்பொருள், புவிச் சரித்திர ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். இதற்காக 1905ஆம்ஆண்டு இவருக்கு டி.எஸ்.சி.பட்டம் வழங்கப்பட்டது . இலங்கைப் பாறைகளும்-

## இன்று அவரின் பிறந்த தினம்

காரீயமும்,இலங்கையின் இயற்கைக் காட்சிகள் உட்பட பல்வேறு ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். இதனால் இலங்கையின் கனிப்பொருள்ஆராய்ச்சிப்பகுதித் தலைவராக நியமிக்கப்பட்டார். பாளங்களைக் காய்ச்சி இரும்பு எடுக்கும் முறை, உருக்கு தயாரிக்கும் முறை பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பித்தார்.

1904இல் தோரியனைற் (Thorinite) எனும் புதுக்கனிப்பொருளைக் கண்டுபிடித்தார். பொதுவாக கண்டு பிடிப்பாளர்கள் தங்கள் பெயரை அதற்குச் சூட்டுவார்கள்.ஆனால் குமாரசுவாமி அவர்கள் அதற்கு இரசாயனப் பெயரையே சூட்டினார்கள்.

இச் செயற்பாடுகளை அவதானித்த சர்வகலாசாலை குமாரசுவாமிக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. இவரதுஆராய்ச்சிப்பொருட்களை இன்றும் நாம் கொழும்பு நூதன சாலையில் காணமுடியும்.

***சமூகசீர்திருத்தச் சபை***

20ஆம் நூற்றாண்டில் இலங்கை வந்த ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இலங்கையர்கள் -குறிப்பாக கரையோர மக்கள் அன்னியர் ஆட்சி மோகத்தால் கவரப்பட்டு மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கியிருந்தனர். இவற்றைக் கண்டித்து இலங்கை மக்களின் பண்டைப் பெருமைகளை விளக்கி அவர்களை விழித்தெழச் செய்தார். இவற்றுக்கு உதவியாக கேணல் ஓல்கெற், அநாகரிக தர்மபால முதலியோரும் கை கொடுத்தனர்.

இக்காலகட்டத்தில் கலை, மொழி, சமூகம் சம்பந்தமான காரியங்களிலும் ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் நேரிடையாக ஈடுபடத் தொடங்கினார்.

நடை, உடை ,பாவனை அனைத்திலும் மாற்றம் காண பத்திரிகைகளில் சுட்டிக்காட்டினார்.

இதன் விளைவாக1905ஆம் ஆண்டு பலசமூகத்தவர்கள் பங்கு கொண்ட சமூக சீர்திருத்தச் சபை ஆனந்தகுமார சுவாமியின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

**இந்திய -இலங்கை உறவு**

இலங்கையின் வளர்ச்சிக்கு இந்தியா பலவழிகளிலும் உதவுகிறது. முக்கியமாக மானசீக, ஆத்ம உறவைக் குறிப்பிடலாம் என்கிறார் ஆனந்தகுமாரசுவாமி.

இந்தியாவும் இலங்கையும் உலக நாகரிக வளர்ச்சிக்கும் பண்பாட்டின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி இருப்பதை நாம் உணரவேண்டும். இப்பொழுது நம் மத்தியில் காணப்படும் குற்றம் குறைகளைஇந்திய முறையில் தீர்த்துக் கொள்ளவேண்டும் எனக் கூறினார்.



இவ்வாறு நமக்கு வழிகாட்டிய கலாயோகி 1909 இல் மத்திய கால சிங்களக் கலைநூலை வெளியிட்டு வைத்தார். 1911 அலகபாத்தில்நடைபெற்ற பொருட் காட்சியில் கலைப்பகுதிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1912ஆம்ஆண்டு முதல் 1916 வரை இங்கிலாந்தில் இருந்தபோது

**இந்தியக்கலைகளும் கைத் தொழில்களும்,**

**இந்து பௌத்த புராணக் கதைகள்,**

**புத்தரும் புத்தரின் கொள்கைகளும்,**

**ராஜபுத்திர ஓவியங்கள்**

ஆகிய நூல்களைவெளியிட்டார். 1917 முதல் 1921 வரைஇந்திய கலைப்பொருள் காப்பாளராகவும் 1933 முதல் 1947வரை (இறக்கும் வரை) இந்திய பாரசீக மகமதியர் கலைப்பொருள் ஆராய்ச்சியாளராகவும் கடமையாற்றினார் என்ற பெருமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

**கரவையூர் ஆதவன்**

# அரசினால் வடக்கில் நடாத்தப்படும் யுத்தத்திற்கு இந்தியா ஒத்துழைப்பு

## இடதுசாரி முன்னணி குற்றச்சாட்டு

அரசாங்கம் முன்னெடுக்கும் யுத்தத்திற்கு ஆயுதங்களையும் ஒத்துழைப்பையும் இந்தியாவே வழங்கிவருகிறது. தமிழர் பிரதேசங்களை இலங்கை அரசின் ஊடாக கைப்பற்றும் நிகழ்ச்சி நிரலே தற்போது வடக்கில் முன்னெடுக்கப்படும் யுத்தமாகும் என்று இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளரும், சப்ரகமுவ மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளருமான சமில் ஜயநெத்தி தெரிவித்தார். இது தொடர்பாக சமில் ஜயநெத்தி மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி மீது படைநடவடிக்கைகள் தொடர்வதாகவும் விரைவில் வன்னியைப் பிடித்து விடுவோமென அரசாங்கம் யுத்தத்திற்கு விளக்கம் கொடுக்கின்றது. இதுவல்ல உண்மை. கிழக்கை கைப்பற்றியதாகக் கூறிய அரசாங்கம் இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றியதாக இல்லை. இன்னும் அம் மக்கள் அகதி முகாம்களிலேயே வாழ்கின்றனர். அம் மக்கள் வாழ்ந்த சம்பூர் போன்ற பிரதேசங்களை இந்தியாவிற்கு விற்றுத் தீர்த்தது.

இதேபோன்று மன்னாரை படையினர் கைப்பற்றிவிட்டதெனக் கூறிய அரசாங்கம் பின்னர் மன்னாரில் எண்ணெய் வள ஆய்வை நடத்த இந்தியாவிற்கு கையளித்தது. அதேபோன்று, இன்று வடபகுதி மீது யுத்தத்தைத் தொடங்கியுள்ளது. இதனால் இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து தங்குவதற்கு இடமின்றி துர்ப்பாக்கிய நிலையில் வாழ்கின்றனர்.

வடபகுதியிலிருந்தும் தமிழ் மக்களை இடம்பெயரச் செய்து அப்பிரதேசங்களை இந்தியாவிற்கு விற்பனை செய்வதே அரசாங்கத்தின் திட்டமாகும். அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்தியா மற்றும் அந்நாட்டின் பாரிய தொழிற்சங்கத்துறை நிறுவனங்களும் உதவிகளை வழங்கி வருகின்றன.

தமிழ் மக்களை இந்தியா ஒருபோதும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது. தமிழ் மக்கள் அரசாங்கத்தின் உண்மையான தமிழ் விரோத உணர்வைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கத்தைத் தோல்வியடையச் செய்ய வேண்டும். இதன் மூலம் முதலடியை எடுத்துவைக்க வேண்டும்.

# படைவீரர்களின் மனோதிடத்தை வலுப்படுத்தும் வகையில் ஊடகங்கள் செயற்படவேண்டும் - மகிந்த



உயிரைப் பணயம் வைத்து நாட்டுக்காகப் போராட்டத்தை முன்னெடுக்கும் படை வீரர்களின் மனோதிடத்தை வலுப்படுத்தக் கூடிய வகையில் ஊடகங்கள் பணியாற்ற வேண்டுமென ஜனாதிபதி சகல ஊடக நிறுவனங்களிடமும் பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசியல்வாதிகளுக்கு அவதூறு ஏற்படும் வகையிலோ அல்லது சாதகமாகவோ செயற்படாது பக்கச்சார்பற்ற வகையில் ஊடகங்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான வகையில் செய்திகள் வெளியிடப்படக்கூடாதெனவும் அவர் ஊடகங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். எம்பிலிப்பிட்டிய மகாவலி விளையாட்டரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் காரணமாக வெளிநாட்டு உதவி கிடைக்காதெனச் சிலர் குறிப்பிட்ட போதிலும் சீனா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்கி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## எதிர்காலத்தில் இலங்கையின் சில பகுதிகளில் அமிலமழை பெய்யக்கூடிய சாத்தியம்!

எதிர்காலத்தில் இலங்கையின் சில பகுதிகளில் அபாயகரமான அமில மழை பெய்யக் கூடிய சாத்தியம் இருப்பதாக பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஓ.ஈ.இளப்பெரும எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைய வருடங்களாக இலங்கையில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றங்களினால் அமில மழை பெய்யக்கூடிய அபாயம் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக அனுராதபுரம், மஹா இலுப்பள்ளம் மற்றும் ஊவா பகுதிகளில் வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழை காலத்தில் அமிலமழை பெய்யலாம் என அவர் தெரிவித்துள்ளார். அமில மழை காரணமாக ஆறுகள், குளங்கள், தாவரங்கள் மற்றும் பொதுமக்களின் சுகாதாரத்திற்கும் தீங்கு ஏற்படக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் விவசாயத் துறைக்கு அமில மழை பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார். அமில மழை தொடர்பாக இலங்கையில் எவ்வித முறையான ஆய்வுகளும் இதுவரையில் நடத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

### உதவி செய்ய வந்த பிரிட்டிஷ் பிரஜையிடம் துப்பாக்கிமுனையில் கொள்ளை

பிரிட்டிஷ் பிரஜையிடம் துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய இருவர் அவரிடம் இருந்த 50 ஆயிரம் ரூபாயையும் 3 கையடக்க தொலைபேசிகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வெலிகம பொலிஸார் தெரிவிக்கையில்,

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டு அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் வந்த பிரிட்டிஷ் பிரஜையான டெனிஸ் பென்ஸில், வெலிகம சார்லிமவுண்ட் தோட்டத்திலிருக்கும் போது ரி.56ரக துப்பாக்கியுடன் வந்த இருவரே இவரிடமுள்ள பணத்தையும் கையடக்க தொலைபேசியையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.


## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் (வ/து)

### கூட்டுறவு நகர்(CO-OP CITY) திறப்பு விழா

இடம்:- அம்பம் பழைய காரியாலயம்
சாமியன் அரசடிக்கு அருகாமையில்

காலம்:- 2008.08.23 சனிக்கிழமை
முற்பகல் 11.00 மணி

தலைவர்:- திரு.த.சிதம்பரப்பிள்ளை அவர்கள்
சங்கத் தலைவர்

பிரதம விருந்தினர்:- திரு.ஆ.சிவசுவாமி அவர்கள்
மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு.பொ.சிவலிங்கம் அவர்கள்
கூ.அ.உ.ஆணையாளர், யாழ்.மாவட்டம்

திரு.சி.சத்தியசீலன் அவர்கள்
பிரதேச செயலர் கரவெட்டி

திரு.பெ.கனகசபாபதி அவர்கள்
தலைவர், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை

**கௌரவ விருந்தினர்கள்**

திரு.செ.கனகசபாபதி அவர்கள்
கூ.அ.உ.ஆணையாளர் (எண்பார்வை), யாழ்.மாவட்டம்,

திரு.இ.சிவஞானசுந்தரம்பிள்ளை அவர்கள்
முகாமையாளர், மக்கள் வங்கி, நெல்லியடி கிளை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

கரவெட்டி
தலைவர்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

(C-1421)


## நல்லூரான் திருவடிக்கு இன்று பதினேழாம் திருவிழா



### நிம்மதியை எமக்கு தருவதெப்போ?

நல்லூரில் வந்துன்னை
நாளும் துதிப் போர்கள்
சொல்லாலே பாமாலை
சூட்டி நிதம் பணிகின்றார்.
கல்லுக்குள் தேரைக்கும்
பேறளிக்கும் பெருமுதலே
இல்லாத நிம்மதியை
எமக்கு நீ தருவதெப்போ?

*மு.க.சிவானந்தம்*

### நல்லைக் கந்தா நல்லருள் செய்

ஊர்க் கோயில் பல சென்றேன் - என்
உளமது ஆறவில்லை கந்தா
உன் பதி தனை நினைத்திடவே
என் உளமது சாந்தமையா

ஓர் மாங்கனி பெற்றிடவே - நீ
ஊரூராய் அலைந்தாய் - மயிலில்
எக்கனி பெற்றிடவே அலைய வைக்கிறாய்
எமை இப் பாரினிலே...

*சு. பிரதீஸ் உரும்பிராய்*

### போரோயச் செய்தே நிம்மதியைத்தருவாய்

அன்பெனும் வலையில் அகப்படும் - முருகா
ஆனந்த சாகரனே அமரர் துயர் தீர்த்தவனே
இன்பவாழ்வு தரும் ஈஸ்வரனின் புத்திரனே
இமையவர் தொழுதேத்தும் முத்துக் குமரனே
துன்பத்தை அழித்தே இன்பந்தரும் குகனே
தூய உள்ளந்தனில் குடியிருக்கும் வேலனே
அன்பருக்கருள் புரியும் ஆறுமுகக் கடவுளே
போரோயச் செய்தே நிம்மதியைத் தருவாய்!

*சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்*
*நாச்சிமார்கோயிலடி*

### குறைகள் தீர்த்திடுவாய்

தங்கச் சிலையாக தகதகக்கும் காட்சி கண்டு
மங்காப் புகழாக உனைப் பற்றிப் பாடுகின்றோம்
பங்கமேது மில்லாமல் திருவிழாக்களும் நடக்கையிலே
எங்கள் குறைகள் யாவும் தீர்த்திடும் நல்லூரானே.

*சி. காசிப்பிள்ளை*

### உரிமையை எமக்கு தாருமையா

சிவனுக்கு உபதேசித்த சுவாமிநாதா
சேதிகள் உரைக்கிறோம் கேட்கலையோ
உவப்பான காலத்தை உருவாக்கி
உரிமைகள் எமக்கு தாருமையா
தவமெல்லாம் புரிந்து வணங்குகிறோம்
தமிழான கடவுளே உதவிடய்யா

*பி.சிவஜிதன்*

### ஆறுதலைத் தந்திடுவாய் சண்முகனே

நல்லூரான் கோயிலுக்கு வாருங்கள்
அவன் புகழ் பாடல்களைப் பாடுங்கள்
வேலவனின் நாமங்களைச் சொல்லுங்கள்
வேண்டும் வரம்தந்திடுவான் நம்புங்கள்

ஆனைமுகன் சோதரனே வேலவனே
ஆறுதலைத் தந்திடுவாய் சண்முகனே
அபயமென்று வருவோர்க்கு அருள்வாயப்பா
அபயம் தந்து எமை நீயும் காப்பாயப்பா

*வ.செல்வராணி*
*சாவகச்சேரி*

# நோத்முதல் கோபல்லவா வரை 75



### இடைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

மக்கலம் வீதி நல்ல முறையில் அமைக்கப்பட்டது. நாளடைவில் சுகாதார விதிகள் நடைமுறைக்கு வந்தமையாலும், சுகாதார வசதிகள் ஏற்பட்டமையாலும், சாக்கடை வடிகால் முறைகள் செய்யப்பட்டமையாலும் கொழும்பு நகர சபையின் பொறுப்புக்கள் அதிகரித்தன. முன்னர் 6463 ஏக்கர் நிலத்தில் பரிபாலனஞ் செய்த சபை இப்போது சில ஆண்டுகளில் 8587 ஏக்கர் நிலத்தைப் பரிபாலிக்க வேண்டியதாயிற்று. இன்னும் 171000 மக்களின் தேவைகளைக் கவனித்த சபை இப்போது 284155 மக்களின் தேவைகளைக் கவனிக்க வேண்டியதாயிற்று. இவற்றோடு இன்றுள்ள சகல வசதிகளையும் நாளடைவில் பெற்ற கொழும்பு கிழக்கு நாடுகளில் மிகவும் சுத்தமான நகரமாய் உள்ளது என வெளிநாட்டார் விதந்து கூறும் வண்ணம் விளங்குவதாயிற்று.

இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் பொதுவாக இலங்கையின் முகம் மாறியமைக்கும் முக்கியகாரணம் கோப்பிச் செய்கையேயன்றிச் சட்டசபையோ சட்டவாக்கங்களோ கட்டளைச் சட்டங்களோவல்ல எனவும் கருதுவர். கோப்பிப் பயிரினாலேயே அரசாங்கமாயினும் தோட்ட முதலாளியாயினும் பொது மக்களாயினும் தங்கள் போக்கை மாற்றியமைக்க வேண்டியவராயினர். கோப்பிப் பயிரால் ஏற்பட்ட செல்வப் பெருக்கத்தையும் செந்தழிப்பையும் அக் காலத்தவர் உவமையில்லா வளப்பம் எனவே கூறினர். உண்மையில் மேல் மாகாணத்திலும் தென்மாகாணத்திலும் இருந்தவருக்கு கோப்பிப் பயிர் செல்வங் கொழித்த சிங்காரப் பயிராகவே நிலவியது.

மீன் பார்வை



கொழும்புக்கோட்டை:- கொழும்புக்கோட்டை பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ்வந்த பின்னர் அங்கிருந்த ஆங்கிலேயரின் எண்ணிக்கை 120 ஆகும் என வரலாற்றாசிரியர் ஜேம்ஸ் கோடினர் குறிப்பிட்டுள்ளார். இதில் 100ஆண்கள். எஞ்சியோர் பெண்கள். இதனைவிட 300டச்சுக்காரர்களும் (ஒல்லாந்த நாட்டவர்களும்) அங்கிருந்துள்ளனர். கோட்டையில் குடியமர வந்த ஆங்கிலேயர்கள் டச்சுக் குடும்பங்களிலிருந்து தமது வாழ்க்கைத்துணையை தேர்ந்தனர். ஆங்கிலேயர்கள் டச்சுக் குடுபங்களிலிருந்து இளம்பெண்களை மணமுடிப்பது அப்போது சாதாரண நடைமுறையாகஇருந்தது. (W.L.SKEEN AND CO 1890)

ஆரம்ப ஆண்டுகளில் 1836 தொடக் கம் 1840 ஆண்டு வரையில் ஆண்டுதோறும் 50000 அந்தர் கோப்பி ஏற்றுமதியாயிற்று. அத் தொகை படிப்படியாக பெருகி 1875 ஆம் ஆண்டளவில் 856570 அந்தராகிற்று. இலங்கைச் சரித்திரத்தில் 1830 தொடக்கம் 1880 வரையுள்ள ஐம்பதாண்டு காலம் கோப்பி இராசாவின் ஆட்சிக்காலம் என்பர். அதன்பின் தேயிலை இராசாவின் ஆட்சிக்காலம் ஆரம்பித்தது.

### நடுவகுப்பார் செய்த கிளர்ச்சி

இலங்கையர் சார்பில், அரசியற் றிருத் தங் கோரிய இலங்கை வாழ் ஐரோப்பியர், பறங்கியர் ஆகிய பெரியார் கள் இலங்கைக் கூட்டவை என்ற சங்கத்தை நிறுவி அதன்மூலம் கிளர்ச்சி செய்வாராயினர். ஒப் சேவர் பத்திரிகையின் ஆசிரியராயிருந்த விலியம்டிக்பிஎன்பார் 1877 ஆம் ஆண்டில் வெளி யிட்டதமது நூலில் பிரதி நிதித் துவ அரசாங்கத்தை அமைத்து நடத்துவதற்கு ஏற்ற பழுத்த அனுபவம் வாய்ந்த புராதனப் பெருமை உள்ள ஒரு நாடு என்ற இலங்கை யைப் பற்றி எழுதிக் குறிப்பிட்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையர் ஓரளவுக்கு ஆங்கிலம் பயின்று மேற்கு நாடுகளின் முறைகளை அறிந்துகொள்வாராயினர். முன்னர் கோல்புறூக் திருத்தத்தின் பிரகாரம் ஆங்கிலமே இலங்கை அரச கருமமொழி எனத் தீர்மானிக்கப்பட்டது. எனவே இலங்கையர் தீவிரமாக ஆங்கிலம் பயிலத் தலைப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக மிசனரிமார் தம் பாடசாலைகளை நிறுவினார்கள்.

இலங்கையர் ஆங்கிலக் கல்வி பயின்று அரசாங்கத்தில் மதிப்புக்குரிய மேல் உத்தியோகங்களில் அமர்வாராயினர். (தொடரும்)

க.சி.குலரத்தினம்



இற்றைக்கு முன்னூறு வருடங்களிற்கு மேலான பழமைவாய்ந்த காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதன்போது மிகவும் உக்கி சேதமடைந்த உள்வீதி சுற்றுப்புற மதில்கள் அகற்றப்பட்டு துரிதகதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இக் காட்சிகளைப் படங்களில் காணலாம்.
(படங்கள்:- ப.ஐங்கரன்)

# யாழ்.குடாநாட்டில் ஆங்கிலமொழிக் கற்றல், கற்பித்தல் 5

## பிரயோக மொழியியலினூடாக ஓர் நோக்கு

தற்காலத்து ஆய்வுகள் பெரும்பாலும் பிரயோக,சமூக, உளவியல் மொழியியலுடன் பின்னிப் பிணைந்த கோட்பாடுகளையோ. அல்லது கருதுகோள்களையோ மையப் படுத்தி மேற்கொள்ளப்படுவன போன்று காணப் படுகின்றன.

ஆனால் எமது மாணவ சமுதாயத்தை மையப்படுத்தி அவர்களது சமூக, பொருளாதார சூழ்நிலைகளுடன் தொடர்புபடுத்தி வகுப்பறைக் கற்பித்தலுடன் பின்னிப்பிணைந்து உருவாக்கப்படும் ஆய்வுக்குரிய கருதுகோள்களே மிகவும் பயனுள்ள ஆய்வுகளாக அதாவது கட்டுரைகள் வடிவத்திலோ அல்லது நூல்வடி வங்களிலோ உறங்காது வகுப்பறைகள் மட்டத்தில் பிரயோகிக்கக் கூடிய அல்லது பரீட்சித்துப் பார்க்கக் கூடிய ஆய்வுகளாக அமையும் என்பது யதார்த்தமாகும்.

ஆங்கில மொழிக் கற்றலுக்குரிய ஆசிரியக் கல்வியையோ அல்லது மேற் பட்டப் படிப்புகளையோ மேற்கொள்பவர்கள் இவ் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டால் ஆங்கில மொழிக் கற்பித்தலில் ஏற்படக்கூடிய சவால்களுக்கு மிக எளிதில் முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

இறுதியாக யாழ்.குடாநாட்டில் ஆங்கில மொழிக்கல்வியை, கற்பித்தலை மேலும் விருத்தி செய்வதற்கான வழிமுறைகள் சிலவற்றை முன்வைத்து இவ் நீண்ட கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

**1.பிராந்தியமட்டத்திலான ஓர் ஆங்கில மொழிக் கல்விக்கான நிலையம் ஒன்றை நிறுவுதல்**(Regional Centre for English Language Education -RCELE)

நான் அண்மையில் இந்தியப் பல்கலைக் கழகங்களில் ஆங்கில மொழிக்கல்வி தொடர்பான ஆய்வு முயற்சிக்கான தேடல் களுக்காகச் சென்றபொழுது அவதானித்த, அங்கு நடைபெறும், நடைமுறைப்படுத்தப் படும் ஆங்கிலமொழிக் கல்வி மற்றும் ஆங்கிலமொழிக் கற்பித்தலிற்கான செயற் திட்டங்கள் சிலவற்றை கல்விச் சமூகத்து டன் பகிர்ந்துகொள்ளலாம் என நினைக் கின்றேன்.

பொதுவாக தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களை எடுத்து நோக்குமிடத்து ஒரு பல்கலைக்கழகமானது தான் சார்ந்த சகல மட்ட கல்விப்புல விருத்திக்கான கேந்திர மையமாக அமைகின்றது. பாடசாலைகள், கல்லூரிகள் என்பவற்றை தன்னகத்தே உள்வாங்கி, அப்பிராந்தியத்தில் நடைபெறும் சகல கல்விசார் நடவடிக்கைகளையும் இயக்கும் வல்லமைப் பெற்றுள்ளன. ஆங்கிலமொழிக் கல்வியை நோக்குமிடத்து, அப்பிராந்தியத்தில் காணப்படுகின்ற சகல ஆங்கிலமொழி போதிக்கும் கல்லூரிகளும் ஒரு பல்கலைக்கழகத்தின் கண்காணிப் பின் கீழ் தமது தமது நடவடிக்கைகளை மேற் கொள்கின்றன.

அதாவது ஆசிரிய நியமனம், பயிற்சி , மீள்பயிற்சி ,ஆசிரியக் கல்வி,ஆய்வு போன்றவை ஒன்றிணைக்கப்பட்டு ஓர் தொடர் சங்கிலி போல் கல்விப்புல அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றது. நகர்ப்புற பாடசாலைகள் தொட்டு கிராமங்களில் காணப்படும் பாடசாலைகள் வரை பல்கலைக்கழகங்களின் வழிகாட்டல்கள் விஸ்தரிக்கப்பட்டுள் ளன.

எமது கல்வி,உயர்கல்வி நிறுவனங்கள் பல்வேறுபட்ட சமூக,அரசியல் காரணிகளால் வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றின் சேவைகளும்,வழிகாட்டல்களும் நிர்வாகக் கட்டுப்பாடுகளினால் ஒருமுகப்படுத்தப்பட்டு ஒரே இடத்தில் குவிக்கப்படுகின்றன அல்லது மையப்படுத்தப்படுகின்றன.

ஆங்கிலமொழி கற்பித்தலைப் பொறுத்த வரை, இவ்விடயத்தை மேற்கொள்ளும் சகல நிறுவனங்களும் ஒன்றுகூடி பொதுமையான சில நிலைப்பாடுகளை எடுப்பதற்கான பிராந்திய மையமொன்று நிறுவப்பட வேண் டும்.

இம் மையத்தின் மூலம் குடாநாட்டில் தொழில்புரிகின்ற சகல ஆங்கில ஆசிரியர்கள் , விரிவுரையாளர்கள், பேராசிரியர்களை ஒன் றிர்க்க முடியும். இந்நிறுவனத்தின் மூலம் ஆங்கிலமொழிக் கற்பித்தலை குடாநாட்டின் சகல மட்டங்களிலும் சமச்சீராக்கி மாணவர் கள் மட்டத்தில் ஆங்கிலமொழிக் கற்பித்தலை குடாநாட்டின் சகல மட்டங்களிலும் சமச் சீராக்கி மாணவர்கள் மட்டத்தில் ஆங்கில மொழித் திறனில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்த முனையலாம்.

கல்வியியலாளர்களின் ஆக்கபூர்வமான முன்வைப்புக்களின் மூலம் ஆங்கில ஆசிரியர்,கல்வி அவர்களிற்கு கொடுக்கப்படும் பயிற்சி, மேலதிகமான உசாத்துணை நூல்கள்,செயல் நூல்கள் தயாரித்தல்,மாதாந்த, ஆண்டிறுதிப் பரீட்சைகள் , ஆங்கில மொழித் திறனாய்வுப் போட்டிகள் என்பன போன்ற விடயங்களில் பல மாற்றங்களைக் கொண்டு வரமுடியும்.

**2. நியமனம் பெறும் ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட வேண்டும்**

வருடாவருடம் புதிதாக நியமனம் பெறும் ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்படுவதும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைக்கு ஓர் காரணமாகக் காணப்படுகின்றது.

தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் ஆங்கில மொழிக் கல்விக்கென்று விசேடமாக மாணவர்களைத் தெரிவு செய்து மூன்று வருட ஆங்கிலமொழிக் கல்வி (Bachelor in English Language Education) பட்டப் படிப்பை மேற்கொள்ள வசதிசெய்து, பட்டப் படிப்பை நிறைவுசெய்தபின்னர், பதிவுசெய்யப் படாத ஆசிரிய மாணவர்களாக நியமனம் வழங்குகின்றார்கள்.

வ.பரந்தாமன்
விரிவுரையாளர்,
ஆங்கிலமொழிப் போதனை நிலையம்,
யாழ். பல்கலைக்கழகம்.

பின்பு இவ் ஆசிரியர்கள் ஆங்கில மொழிக் கல்வியில் முதுகலைமாணிப் பட்டம்பெற்ற பின்பே தமது பதவிகளை நிரந்தரமாக்கிக் கொள்கின்றார்கள். இவ் ஆசிரியர்கள் தமது பதவிகளை நிரந்தரமாக்கி முழுமையான பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக மிளிரும்போது பெரும்பாலும் அவர்களது வயது எல்லை 25 வருடங்களாகவே இருக்கும். (தொடரும்)

## சைவசமய அறிவுப்போட்டி

சிவலிங்க யோககேந்திரா நிலையம் நடாத்தும் சைவசமய அறிவுப் போட்டி ஆவரங்கால் அருள்முருகன் ஆலய மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யோககேந்திரா நிலையத் தலைவர்கள் நா. நவராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ)

## உள்ளூராட்சி வாரவிழா

வலி வடக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர் இ.அருணகிரி அறிவித்துள்ளார். (ஓ)

## மஹாகும்பாபிஷேகம்

(அனலைதீவு)

அனலைதீவு மேற்கு கீதாஞ்சலி அருள்மிகு பூதேவி, ஸ்ரீதேவி சமேத ஸ்ரீமகா விஷ்ணு மூர்த்தி(வல்லியப்பர்) சுவாமி திருக்கோவில் நூதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 6.10 முதல் 7.10 மணிவரையுள்ள முகூர்த்தத்தில் நடைபெறுகின்றது.

இவ்விழாவில் "கும்பாபிஷேக மகத்துவம்" எனும் தலைப்பில் ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் சமயசொற்பொழிவாற்றுவார். (ஓ)




# வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் தொடர்பான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு உயர்பாதுகாப்பு வலய மீள் குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்து முகமாக இப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வேறு பிரிவுகளில் வசிக்கும் குடும்பங்களின் விபரங்களை ஒழுங்குபடுத்துவதற்காக அப்பகுதி மக்களை பின்வரும் ஆவணங்களுடன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் திகதிகளில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

**எடுத்துச்செல்ல வேண்டிய ஆவணங்கள்**

குடும்பப் பங்கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டை, காணி உறுதி, குடும்ப அங்கத்தவர்களின் விபரங்கள், உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய ஆவணங்கள்.

**சமுகமளிக்கவேண்டிய திகதிகள்**

**25ஆம் திகதி திங்கள்** J/221 இளவாலை வடக்கு, J/222 இளவாலைவடமேற்கு, **26ஆம்திகதி செவ்வாய்** J/223 வித்தகபுரம், J/224 பன்னாலை,

**28ஆம் திகதி வியாழன், 29ஆம்திகதி வெள்ளி** J/227 தெல்லிப்பழை கிழக்கு, J/228 தெல்லிப்பழை, J/229 துர்க்காபுரம், J/230 தந்தை செல்வாபுரம், **செப்ரம்பர் 2ஆம்திகதி செவ்வாய்** J/238 கட்டுவன், J/239. கட்டுவன் மேற்கு,

**4ஆம் திகதி வியாழன்** J/244 வசாவிளான் கிழக்கு, J/245 வசாவிளான் மேற்கு.

**5ஆம் திகதி வெள்ளி** J/225 கொல்லங்கலட்டி, J/226 நகுலேஸ்வரம்,

**8ஆம் திகதி திங்கள்** J/231 மாவிட்டபுரம், J/232 மாவிட்டபுரம் தெற்கு.

**9ஆம் திகதி செவ்வாய்** J/233 காங்கேசன்துறை மேற்கு, J/234 காங்கேசன்துறை மத்தி, J/235 காங்கேசன்துறை தெற்கு.

**12ஆம் திகதி வெள்ளி** J/236 பளைவீமன்காமம் வடக்கு, J/237 பளை வீமன்காமம் தெற்கு.

**15ஆம் திகதி திங்கள்** J/240 தென்மயிலை, J/241 வறுத்தலைவிளான்.

**16ஆம் திகதி செவ்வாய்** J/242 குரும்பசிட்டி, J/243 குரும்பசிட்டி கிழக்கு.

**18ஆம் திகதி வியாழன்** J/246 மயிலிட்டி வடக்கு.

**19ஆம் திகதி வெள்ளி** J/247 தையிட்டி கிழக்கு, J/249 தையிட்டி வடக்கு, J/250 தையிட்டி தெற்கு.

**22ஆம் திகதி திங்கள்** J/248 மயிலிட்டி துறை தெற்கு, J/251 மயிலிட்டிதுறை வடக்கு,

**23ஆம்திகதி செவ்வாய்** J/252 பலாலி தெற்கு ,J/253 பலாலி கிழக்கு.

**செப்ரம்பர் 25ஆம்திகதி வியாழன்** J/254 பலாலி வடக்கு, J/255 பலாலி வடமேற்கு, J/256 பலாலி மேற்கு. (ஓ)



அளவெட்டி தெற்கு மகாஜன சபை ஈஸ்வரன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் வினோத உடை நிகழ்ச்சியில் பங்குபற்றும் சிறுவர்களையும், விருந்தினர்கள் போட்டிகளை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு தடகளப் போட்டி முடிவுகள்

(கரம்பொன்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையால் விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்துப்பட்ட தடகளப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை விளையாட்டு அலுவலரினால் அறிவிக்கப் பட்டுள்ளது. வெற்றியீட்டியோரின் பெயர் மற்றும் கழகங்களின் விபரம் கீழ் தரப்படுகின்றது.

*100மீற்றர்:-* .கதீசன் -காந்திஜி, சு.கதிர்சுந்தரம் -காந்திஜி, ம. சரண்ராஜ் -காந்திஜி,

*200மீற்றர்:-* ம.சரண்ராஜ்-காந்திஜி ,க.கதீசன்-காந்திஜி, சு.கதிர்சுந்தரம்-காந்திஜி.

*400மீற்றர்:-* க.கதீசன் -காந்திஜி , தே. கோமகன் -காந்திஜி, ம.சரண்யா -காந்திஜி,

*800மீற்றர்:-* கிருஷ்ணன் புவி -ஞான ஒளி5, தொ.செல்வராஜ் -பத்திமா, ஆ. சுஜீபன்- ஞானஒளி1

*1500மீற்றர்:-* தொ. செல்வராஜ்-பத்திமா, ம.தோமஸ் தீபன்-பத்திமா, தி.சுதன்-அருணோதயா.

*5000மீற்றர்:-* தொ.செல்வராஜ் -பத்திமா, ஜீவானந்தன் -அண்ணா மூன், தே. கோமகன்-காந்திஜி.

*10000மீற்றர்:-* ஜீவானந்தன் -அண்ணா மூன் ,கிருஸ்ணன்புவி -ஞானஒளி3, ஆ.சுஜீபன் -ஞானஒளி1

*நீளம்பாய்தல்:-* தே.யூலிடெனிஸ்-ஞான ஒளி 5, கே. சந்திரகுமார்-அண்ணா மூன் , ச. கதிர்சுந்தரம்-காந்திஜி.

*முப்பாய்தல்* கே. சந்தரகுமார் -அண்ணா மூன் ,அ.டொபின்கோ-ஞானஒளி3, ஜே. டர்மிகன்- அண்ணாமூன்

*உயரம்பாய்தல்:-* அ.டொபின்கோ-ஞானஒளி5, தே. கோமகன் -காந்திஜி.இ. அனோராஜ்-அருணோதயா.

*குண்டெறிதல்:-* தி.கஜேந்திரன் -அருணோதயா, த.துசிதன் காந்திஜி, த.தங்கரதன்-காந்திஜி.

*தட்டெறிதல்:-* அ.யோ.அமலன் -ஞான ஒளி5, தி.கஜேந்திரன் -அருணோதயா, த.துசிதன்-காந்திஜி,

*ஈட்டி எறிதல்:-* தி.கஜேந்திரன்-அருணோதயா, கே.சந்திரகுமார்-அண்ணா மூன், தெ. சத்தியராஜ்-காந்திஜி.

*100மீற்றர்:-* யூ.விஜிதா-சென்ஜேம்ஸ், சி.மேரிகேமா-சென்ஜேம்ஸ், ஞா.தனுஷா-சென்ஜேம்ஸ்.

*200மீற்றர்:-* த.ரேணுகா-ஞானஒளி5, சி.மேரிகேமா-சென்ஜேம்ஸ், ஞா.தனுஷா-சென்ஜேம்ஸ்

*400மீற்றர்:-* ஞா.தனுஷா-சென்ஜேம்ஸ், செ.சுரேகா-சென்ஜேம்ஸ், த. ஜனனி-காந்திஜி.

*800மீற்றர்:-* செ.சுரேகா-சென்ஜேம்ஸ், ஜெ.ஜெஸ்னி-சென்ஜேம்ஸ், ம.ம்யூரி-ஞான ஒளி1.

*1500மீற்றர்:-* ஜெ.ரேகா-சென்ஜேம்ஸ், ஜெ.ஜெசீலி-சென்ஜேம்ஸ், கி.கிருஷா -ஞான ஒளி1.

*5000மீற்றர்:-* கி.கிருஷா-ஞான ஒளி5, ஐ.தயாளினி-அருணோதயா, கி.தர்சிகா-ஞானஒளி 1.

*10000மீற்றர்:-* கி.கிருஷா-ஞான ஒளி5, பெ.அனுஷா-அருணோதயா, கி.தர்சிகா-ஞான ஒளி1.

*நீளம்பாய்தல்:-* யூ.விஜிதா-சென்ஜேம்ஸ், றொ.டயானா சுறோமி -ஞானஒளி 3, அ.வெலிங்ரா-சென்ஜேம்ஸ்.

*முப்பாய்தல்:-* யூ.விஜிதா -சென்ஜேம்ஸ், இ.இராஜமனோகரி-காந்திஜி, உ. ஜெரோசினி-சென்ஜேம்ஸ்.

*உயரம் பாய்தல்:-* நா.நித்தியா -காந்திஜி, த.ரேணுகா-ஞான ஒளி3, ம.டர்மா-ஞான ஒளி1, ஹ.டர்சிகா-காந்திஜி

*குண்டெறிதல் :-* ஜெ.ஜீவிதா -அருணோதயா, ம.சோபிகா-ஞான ஒளி3, ஹ.டர்சிகா-ஞான ஒளி1.

*தட்டெறிதல்:-* அ.மேரிரிசோபா-சென்ஜேம்ஸ், அ.வெலிங்ரா-சென்ஜேம்ஸ், இ.ஜனனி-காந்திஜி,

*ஈட்டிஎறிதல்:-* அ.வெலிங்ரா-சென்ஜேம்ஸ், ஹ.டர்சிகா- ஞானஒளி3, ம.சோபிகா-ஞான ஒளி1.

(ஓ-14)

## விளையாட்டுப் போட்டி

திருமறைக்கலாமன்றம் சிறுவர் கலைக்கூட சிறுவர்களுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை சனிக் கிழமை பி.ப 1மணிக்கு 238, பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் யாழ்ப்பாணம், சில்லாலை, கரவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிறுவர் கலைக்கூட சிறுவர்கள் பங்கேற்கவுள்ள இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கெயர் நிறுவனத்தின் பிரதிப் திட்டப் பணிப்பாளர் ஜோய் றோஸ் ஞானேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலரும் யாழ். புனித பத்திரிசியார் ஆசிரியருமான ம.பேட்டிபனிஸ்ரரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள். (ஓ)

## தெய்வீக இசையரங்கு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடாத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை செல்வி தாரணி ரஞ்சனின் இசைநிகழ்ச்சி இடம் பெறும்.

நிகழ்வில் அணி செய்கலைஞர்களாக செல்வி பாக்கியலட்சுமி நடராஜா (வயலின்), பி. ரமணா (மிருதங்கம்)ஆகியோர் பங்கபற்ற உள்ளனர். (ஓ)

## தெய்வீகத் தொடர் இசைப்பேருரை

நல்லூர்க்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயர் ஆலயமண்டபத்தில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ .வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வரும் "கந்தபுராணம்" பற்றிய தெய்வீக தொடர் இசைப் பேருரையில் இன்று "முருகோதயம்" என்னும் தலைப்பில் இசைப் பேருரை நிகழ்த்துவார். (ஓ)

## உள்ளூராட்சி ஓய்வூதியம் பெறுவோரின் கவனத்திற்கு

1993.09.03 உம் திகதிக்கு முன்பு ஓய்வு பெற்ற உள்ளூராட்சி சேவை ஓய்வூதியர்கள். விதவைகள், அநாதைகள் சேமலாப (LGS W & OP) இலக்கம் சிவில் ஓய்வூதிய இலக்கத்துக்கு மாற்றுவது சம்பந்தமாக நிலவிய சந்தேகம் தொடர்பாக உள்ளூராட்சி ஓய்வூதியர் பிரிவின் பிரதம கணக்காளர், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் மற்றும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவலர்கள் அமைச்சருடன் வடமாநில ஓய்வூதியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தொடர்புகொண்டதை அடுத்து அவ்வாறு 1993 செப்ரெம்பர் 03ஆம் திகதிக்கு முன்பு ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஓய்வூதியர்கள் தமது உள்ளூராட்சி சேவை விதவைகள், அநாதைகள் இலக்கத்தை சிவில் இலக்கத்துக்கு மாற்றத் தேவையில்லை என உள்ளூராட்சி ஓய்வூதிய பிரிவின் பிரதம கணக்காளர் சம்மேளனத்துக்கு தெரிவித்துள்ளதாக வட மாநில ஓய்வூதிர்கள் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் அறிவித்துள்ளார். (ஓ)

## சிறப்புச் சொற்பொழிவும் கூட்டுப்பிரார்த்தனையும்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும் சமய சொற்பொழிவுகளில் நாளை சனிக்கிழமை 3மணிக்கு "தன்னம்பிக்கை" எனும் பொருளில் நா. நவராஜ் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார். அத்துடன் ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை, சங்கானை மாவடி ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம் பெறும். (ஓ)

## அலங்கார உற்சவம்

(சுன்னாகம்)

சுன்னாகம் ,மயிலணி ஸ்ரீமுத்துமாரி அம்மன் (வடலியம்மன்) ஆலயவருடாந்த அலங்கார உற்சவம் நாளைசனிக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெற்று பதினொராம் நாளான செப்ரெம்பர் 2ஆம் திகதி செவ்வாய்கிழமை மகா சங்காபிஷேகம், தண்டிகை உற்சவம் ஆகியன நடைபெற உள்ளது. (ஓ)

தவறிழைத்தவன் மறந்து விடுகிறான். ஆனால் தவறிழைக்கப்பட்டவன் மறப்பது இல்லை.

~ ஆபிரிக்கா

வலம்புரி

## எதிர்க்கட்சியாக இருக்கும்போது பிறக்கின்ற (மெய்ஞ்)ஞானம்

இந்திய மத்திய அரசில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியில் அமரும்போது ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு உறுதியான தீர்வு காணப்படுமென அந்தக் கட்சியின் தமிழ் மாநில பொதுச் செயலாளர் திருமதி தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளமை இங்கு நோக்குதற்குரியது.

பொதுவாக எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும்போது ஞானம் பிறப்பது சாதாரண விடயம்.

அதனடிப்படையாகவே பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர் இந்த உத்தரவாதத்தை கூறியுள்ளார் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும்.

ஏனெனில் பாரதீய ஜனதாக் கட்சி இந்திய மத்திய ஆட்சியில் இருந்தபோது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அதன் தலையீடு போதுமானதாக இருக்கவில்லை.

அதாவது தற்போதைய காங்கிரஸ் ஆட்சியைப் போன்று இலங்கை அரசுக்கான ஆயுத உதவிகள், கடலோரக் கண்காணிப்புக்கள் போன்று பாரதீய ஜனதாக் கட்சி செயற்படாவிட்டாலும் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை அந்தக் கட்சி பயன்படுத்தியிருக்கலாம் என்ற கருத்தை ஒட்டு மொத்தமாக மறுப்பதற்கில்லை.

அதேவேளை எதிர்க்கட்சியாக இருக்கும்போது இத்தகைய உத்தரவாதங்களை, உறுதிமொழிகளை வழங்குவது ஓர் சாதாரண விடயம் என்பதற்கு தமிழக முதல்வர் கருணாநிதியும் நல்லதோர் உதாரணம்.

செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்த கருணாநிதி முதலமைச்சராக பதவியேற்றதும் தான் பேசியவற்றையெல்லாம் மறந்துவிட்டார்.

உண்மையில் ஈழத்தமிழர்கள் மீது –தமிழ் மொழி மீது –தமிழ் இனத்தின் மீது கலைஞருக்கு பற்றுறுதி இருக்குமாயின், அவர் தனக்குக் கிடைத்த முதலமைச்சர் பதவியை ஈழத்தமிழரின் பிரச்சினையை தீர்த்து வைக்க பயன்படுத்தியிருப்பார்.

தமிழக மாநிலத்தில் முதல்வராகவும், மத்தியில் அரசமைக்கும் கர்த்தாவாகவும் இருக்கும் கலைஞர் கருணாநிதி, ஈழத்தமிழர் விடயத்தில் கரிசினை காட்டுவாராயின் அதற்கு மத்திய அரசு நிச்சயம் மதிப்பளித்திருக்கும்.

ஈழத்தமிழர்களின் உரிமை விடயத்தில் மத்திய அரசு கவனமெடுக்கத் தவறினால் மத்திய அரசுக்கான ஆதரவை திராவிட முன்னேற்றக் கழகம் விலக்கிக் கொள்ளும் என கலைஞர் கருணாநிதி கூறுவாராயின் மத்திய அரசு அதனை செவிசாய்த்து ஈழத்தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கும்.

என்ன செய்வது? பேசுவது ஒன்று, செயல் இன்னொன்றாயின், அதிகார பீடங்கள் மாறும்போது அவை தொடரத்தானே செய்யும். அந்த நிலையைத்தான் பாரதீய ஜனதாவும் கூறி முடிக்கிறது அவ்வளவுதான்.

# ‘எப்படியாவது தேர்தலை வெற்றி கொள்வோம்’ என்பதன் அர்த்தம் என்ன? ஜே.வி.பி.கேள்வி

எப்படியாவது தேர்தலை வெற்றி கொள்வோம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்கள் கூறுகின்றனர். எப்படியாவது என்பதன் அர்த்தம் என்ன வென்று அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறோம். இதனை நாட்டு மக்களும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்று சப்ரகமுவ மாகாணத்தின் ஜே.வி.பி. முதன்மை வேட்பாளர் சமிர கொஸ்வத்த தெரிவித்தார்.

ஜே.வி.பி.யினால் செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு சமிர கொஸ்வத்த மேலும் கூறுகையில்,

சப்ரகமுவ மாகாணத்தில் ஜே.வி.பிக்கான மக்கள் ஆதரவு நாளுக்கு நான் அதிகரித்து வருகின்றது. இதனை அரச தரப்பினரால் பொறுத்துகொள்ள முடியவில்லை. சில தினங்களுக்கு முன்னர் நிவிந்திகலையில் ஜே.வி.பி.ஆதரவாளர்கள் மீது பட்டப்பகலில் தாக்குதல் நடத்தப்பட்டது. எமது தேர்தல் பிரசாரங்களுக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.

நாம் மக்களிடம் செல்ல அஞ்சவில்லை. தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற அச்சமும் எம்மை ஆட்கொள்ளவில்லை. இந்தப் பயம் அரசாங்கத்திற்கே இருக்கின்றது. ஆகவேதான் வன்முறைகளை கையாள்கின்றது. அரச தரப்பினரின் வன்முறைகள், ஜேவி.பி.மீதான தாக்குதல்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறையிடப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து பொலிஸார் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை.

பக்கச்சார்பாக நடந்து கொள்கின்ற பொலிஸ் அதிகாரிகள், வன்முறையாளர்களுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றனர். இந்நிலையில், எப்படியாவது தேர்தலில் வெற்றிகொள்வோம் என அமைச்சர்கள் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் உள்ளார்ந்த அர்த்தம் வாக்குக் கொள்ளையை உணர்த்தி நிற்கின்றது. இது குறித்து அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும். அதேநேரம் மக்களும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே மோசடிக்காரர்களையும் ஜனநாயக விரோதிகளையும் எதிர்வரும் 23ஆம் திகதியுடன் வீட்டுக்கு அனுப்பிவைக்க சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண வாக்காளர்கள் தமது வாக்குகளைப் பாவிக்க வேண்டும் என ஜே.வி.பி.கோரி நிற்கின்றது.

இதேவேளை வாக்குரிமை, அடிப்படை உரிமை ஆகியவற்றுடன் வாக்குச் சாவடிகளையும் பாதுகாத்து நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலாக அமைவதற்கு கட்சி பேதமற்ற வகையில் அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்று ஜே.வி.பி.கோரி நிற்கின்றது.

# நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தல் இலங்கையில் நடைபெற வேண்டும்

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்

இலங்கையில் நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவதனை அமெரிக்கா எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கவை புதன்கிழமை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தேர்தல் ஆணையாளரை சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கை உட்பட உலகின் பல நாடுகளில் நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவதனை அமெரிக்கா விரும்புகின்றது.

தேர்தல் ஆணையாளருடன் நான் மேற்கொள்ளும் இரண்டாவது சந்திப்பு இதுவாகும். கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தேர்தல் ஆணையாளருடன் சிறப்புச் சந்திப்பினை நடத்தியிருந்தேன். நாம் எந்த அரசியல் கட்சிகளுடனும் இணைந்து செயற்படவில்லை. இலங்கையில் நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடத்தப்படுவதே எமது நோக்கம் என்றார் அவர்.

# பாதுகாப்புக் கடமையில் இருந்த கான்ஸ்டபிள் வெட்டிக் கொலை

கொட்டாஞ்சேனை, ஜம்பட்டா வீதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளின் கூரிய ஆயுதங்களால் கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸாரால் அண்மையில் சீல்வைக்கப்பட்ட அச்சகம் ஒன்றின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இனந்தெரியாத ஆயுததாரிகளின் தாக்குதலுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு 9.20 மணியளவிலேயே இடம்பெற்றுள்ளது. கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பீ.சீ - 74233ஆம் இலக்கத்துடைய எஸ். எம். டபிள்யூ.ஜீ. இந்திக்கபண்டார ஹேரத் (24வயது) எனும் கான்ஸ்டபிளே சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார். இவர் மாத்தளை நாவுல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இனந்தெரியாத ஆயுதாரிகளால் தாக்கப்பட்ட இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமாகிய ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

# வெள்ளி நற்சிந்தனை 34

## பக்தியின் மொழி தமிழ்

மனிதர்களோடு இறைவன் தொடர்பாடல் செய்பவன் எனச் சம்பந்தர் கூறியுள்ளார். அப்பரும் இக்கருத்தைச் சொல்லியுள்ளார். சம்பந்தர் இறைவன் எல்லோரிடம் பேசுகின்ற பான்மையன் எனக்குறிப்பிட்டுள்ளார். தெய்வம் நம்முடன் வாய் திறந்து பேசுமா? இக்கேள்வி எல்லோர் உள்ளத்திலும் தோன்றுவதுண்டு. மனிதரோடு மனிதர் பேசும்போது வாய்விட்டுப் பேசாமல் குறிப்பினால் பேசுகின்ற நிலையும் உண்டு. முகக் குறிப்பும் கண்களின் பார்வையும் பேசும் கருவிகளாக நாம் தொடர்பாடல் செய்வதுண்டு.

இத்தகைய பேச்சுத் தொடர்பு நெருக்கமான தொடர்புடையவர்களால் பயன்படுத்தப்படுகிறது. மற்றவர்களறியாமல் இருவர் மட்டும் தமது கருத்துப் பரிமாற்றத்திற்கு இப்பேச்சைப் பயன்படுத்துவர். இது சுயநலத்தின் பாற்பட்டது. இறைவன் எல்லா உயிர்களிடமும் அன்புகொண்டவன். உலகத்தவர் எல்லோரிடமும் இத்தகைய தொடர்பாடலைச் செய்பவன். அவனுடைய தோற்றத்தை நன்கு உற்று நோக்கினால் அவனுடைய பேசும் பான்மையை உணரலாம் எனக் குழந்தைக்கவியான சம்பந்தர் பாடியுள்ளார். இது அவருடைய சொந்த அனுபவம்.

பூம்புகலி என்ற தலத்திற்குச் சென்றபோது அவருக்கு இத்தகைய அனுபவம் ஏற்பட்டது. வழிபடச்சென்றவர் இறைவன் திருக்கோலத்தை உன்னிப்பாகப் பார்க்கிறார். மிகுந்த நறுமண முடைய கூவிளமலரும் மத்தமலரும் அவரை இறைவன் அருகே செல்ல அழைக்கின்றன. பொடி பூசிய அவனுடைய மேனியழகு அவரைக் கவர்கிறது. இறைவன் தன்னிடம் பேசுவது போலத் தோன்றுகிறது. நாள்தோறும் இறைவன் பேச்சைக் கேட்பதற்கு விருப்புடன் செல்கிறார். அப்போது இறைவன் தன்னுடன் மட்டுமல்ல வழிபட வருகின்ற அனைவருடனும் பேசுவதைக் காண்கிறார். இறைவன் பேசுகின்ற பாங்கு அடியவர்களை ஆலயத்திற்கு அழைக்கிறது. வரதகரமும் அபயகரமும் சொல்லும் செய்திகள் அடியவர்களை ஆறுதல்படுத்துகின்றன.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

சம்பந்தர் தான் கண்ட பேசுகின்ற இறைவனை எல்லோரும் சென்று காணவேண்டும் என்று நினைக்கிறார். அதனால் பத்துப்பாடல்களைப் பாடி இறைவனின் அன்பு உள்ளத்தை எல்லோரும் அறியவைக்கிறார். புகலிநகரில் உறையும் இறைவனைப் போற்றினால் இன்னலம் உண்டாகும். துன்பம் ஏற்படாது. நேசம் உண்டாகும். பாவங்கள் அற்றுப்போகும். சென்று கைதொழுதால் செல்வம் சேரும்.

இவ்வாறு திருக்கோயில் வழிபாட்டின் பயனைச் சம்பந்தர் விளக்கமாக எடுத்துக் கூறுவது எல்லோரும் பயன் அடைய வேண்டும் என்பதற்காகவேயாம். தான் பெற்ற இறையனுபவத்தையும் மனமகிழ்ச்சியையும் எல்லோரும் பெற வேண்டும் என விரும்பிய சம்பந்தர் அதனைப் பாடலில் பதிவு செய்துள்ளார்.

“கடிகொள் கூவிள மத்தம் வைத்தவன்
படி கொள் பாரிடம் பேசும் பான்மையன்
பொடிகொள் மேனியன் பூம்புகலியுள்
அடிகளை அடைந்து அன்பு செய்மினே”

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தான நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அன்று காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி பகல் 11 மணிக்கு சித்திவிநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும். (ச-3)

## புங்குடுதீவு மக்களுக்கான சேவைத் திட்ட முகாம்

(யாழ்ப்பாணம்)

தீவக லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் புங்குடுதீவு மக்களுக்கான மாபெரும் சேவைத் திட்ட முகாம் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் நடைபெறும்.

இச் சேவைத் திட்ட முகாமில் மருத்துவ பரிசோதனையும் மருந்து வழங்கலும் குழந்தைகளுக்கான மருத்துவப் பரிசோதனை, சல, இரத்தப் பரிசோதனை, கண்ணாடி வழங்கல், முதியோரைக் கௌரவித்தல் உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச)

## கூட்டுறவு நகர் திறப்பு விழா

(நெல்லியடி)

கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு நகர் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குச் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கலந்து கொள்கின்றார். (ச-3)

## ஓகஸ்ட் 27 ஆம் திகதியன்று வானத்தில் இரு சந்திரன்கள்?

(கொழும்பு)

செவ்வாய்க்கிரகமானது எதிர்வரும் 27 ஆம் திகதி பூமிக்கு மிக நெருங்கி வரவுள்ள தாகவும் அது பூமியிலிருந்து பார்க்கும்போது 2-வது சந்திரன் போன்று தோற்றமளிக்கும் எனவும் அராபியப் பத்திரிகைகள் அண்மையில் அறிக்கையிட்டிருந்தன.

இந் நிலையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வானிலை நிபுணர்கள் மேற்படி எதிர்வு கூறல் அறிக்கைகளை நிராகரித்துள்ளனர். எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க் கிரகமானது வானத்தில் பெரிய நிலவு போன்று தோற்றமளிக்கும் எனவும் அதனால் வானத்தில் இரு சந்திரன்களைப் பார்க்கும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கும் எனவும் இணையத் தளங்கள் பலவற்றிலும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

செவ்வாயானது ஒவ்வொரு 780 நாள்களுக்கும் ஒரு தடவை சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் பயணிக்கையில் பிரகாசமான தோற்றத்தை வெளிப்படுத்துவது வழமையாகவுள்ளது என எமிரேட்ஸ் வானிலை சபையின் இஸ்லாமிய சந்திர அவதான திட்டத் தலைவர் மொஹமட் சொயுகத் அவதா தெரிவித்தார்.

மேற்படி செவ்வாய்க்கிரகமானது இவ்வருடம் மனித வெற்றுக் கண்ணுக்கு முழு நிலவு அளவு தோன்றுவது சாத்தியமில்லை எனக் குறிப்பிட்ட அவர், 2287 ஆம் ஆண்டில் அத்தகைய இரு சந்திர தோற்றப்பாடு வானில் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறினார். (ச-5)



நீதிமன்ற உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட குழுவினரைக் கைது செய்யத் தவறியமை குறித்து பொலிஸ் மாஅதிபருக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் நேற்று மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது கலந்து கொண்ட ஊடகவியலாளர்களைப் படத்தில் காணலாம்.

## ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த யாழ்.கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான ஓகஸ்ட் மாதத்திற்குரிய சம்பளம் வழங்கப்படவிருப்பதனால் மேற்படி ஆசிரியர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் கையொப்பம் இட்டு வங்கியூடாகப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

## தீவகக் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் அ.த.க. பாடசாலை, மெலிஞ்சிமுனை றோ.க.த.க. பாடசாலை (வகை 3) ஆகியவற்றின் அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தீவக வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆசிரியர் சேவையில் தரம் -1, தரம் 2-1 ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். அதிபர் சேவையிலுள்ளவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து ஆசிரிய சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களை தீவக வலயக் கல்விப் பணிமனையில் பெற்று செப்ரெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் தீவக வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும் எனத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜ. வி. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ச)

## சரணடைந்த மேர்வின் சில்வா...

செய்யப்பட்டால் பிணை இரத்துச் செய்யப்படும் எனவும் மேலதிக நீதிவான் தெரிவித்தார்.

இந்த வழக்கில் அமைச்சர் மேர்வின் சில்வா சந்தேக நபராகக் குறிப்பிடப்படவில்லை என அவரது சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார். இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டத் தரணியின் வாதத்தை நிராகரித்த மேலதிக நீதிவான், அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட மற்றும் சிலரை போலியகொடப் பொலிஸார் பகிரங்க விசாரணையின்போது பெயரிட்டிருந்ததாகக் குறிப்பிட்டார்.

நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட குழுவினரை கைது செய்யத் தவறியமை குறித்து பொலிஸ் மாஅதிபருக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் ஊடக அமைப்புக்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஊடக ஊழியர் தொழிற் சங்கச்சம்மேளனம் ஆகிய ஊடக அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த எதிர்ப்புப் ஆர்ப்பாட்டத்தில் பல ஊடகவியலாளர்கள் பங்குபற்றியிருந்தனர். ஊடகங்களுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துவதற்கு முடியாமல் போகுமாயின் அதற்கு எதிராக எதிர்காலத்தில் பாரிய நடவடிக்கை ஆரம்பிக்கப் போவதாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு அச்சம் அடைந்த காரணத்தினாலேயே அமைச்சர் மேர்வின் சில்வா நீதிமன்றத்தில் ஆஜரானதாக உழைக்கும் பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் போதல ஜெயந்த ஆர்ப்பாட்டத்தின்போது தெரிவித்தார்.

இதேவேளை சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரியவும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது உரையாற்றினார். (ச-3)

## இளம்...

ணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை மேலதிக நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-52)

## திருமலையில்...

தனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குச்சவெளிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணைகளைத் திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதிபதி மேற்கொண்டுள்ளார். (ச-5)

## ஓமந்தையில்...

யினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல் களையடுத்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் இத் தாக்குதலை மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டதாக விமானி ஊர்ஜிதப்படுத்தியுள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## எறிகணைத்...

வதற்குத் தயாராகவுள்ளதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

மக்கள் தங்கள் உடைமைகளுடன் வேறு பகுதிகளுக்குச் செல்வதில் ஏற்பட்டுள்ள பாரிய போக்குவரத்துச் செலவுகளைப் போக்கும் வகையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்போது இடம்பெயரும் மக்களுக்கான போக்குவரத்து உதவிகளை வழங்கி வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

## துணுக்காய் சுற்றி...

களுக்கு எதிராக வன்னிப் பிரதேசத்தில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சண்டைகளில் 14 விடுதலைப்புலிகளும் 3 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகவும்,

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் போர் முனைகளிலும் வெலி ஓயா மற்றும் யாழ்ப்பாணம் கிளாலி பகுதிகளிலும் இந்த மோதல்கள் இடம்பெற்றிருப்ப தாகவும் பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ச-5)

## வன்னியில் மோதலால் இடம்பெயரும்...

கத்தோலிக்கத் தொண்டு உதவி அமைப்பின் தேவைப்படுவோருக்கான திருச்சபையிடம் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள யாழ்.ஆயர் சவுந்தரநாயகம் ஆண்டகை மேலும் கூறியுள்ளதாவது,

விடுதலைப்புலிகளுடனான் அரச படையினரின் போரானது உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. மக்கள் இடையில் சிக்கியிருக்கின்றனர். படைகளின் முன்னேற்றத்தினால் மக்கள் தமது கிராமங்களை விட்டு ஓடிக் கொண்டிருக்கின்றனர். என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரியாத நிலையுள்ளது.

போரினால் தமது வீடுகளை விட்டு வெளியேறியிருப்போரின் நிலைமை தொடர்பாக நான் கவலையடைந்துள்ளேன். இந்தப் போரினால் பாதிக்கப்படுவோர் பொதுமக்களே ஆகும். கடவுள்தான் அவர்களைக் காப்பாற்றக் கூடும்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இருப்பிடங்களை விட்டு வெளியேறியோர் மரங்களின் கீழும் திறந்த வெளிகளிலும் மிக மோசமான நிலைமையில் உள்ளனர். அவர்களுக்கு புகலிடம் இல்லை, தண்ணீர் இல்லை, மலசலகூடங்கள் இல்லை, உணவில்லை, மருத்துவ வசதிகள் இல்லை, கூடாரங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அப்பகுதிகளுக்குக் கொண்டு செல்ல அனுமதியுமில்லை. இவை மிக அவசியமானவையாகும்.

அரசு உதவிகளை வழங்கினாலும் இராணுவக் கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் உதவிகளைப் பெற முடியாதுள்ளது. அரசு உணவுப் பொருள்களை அனுப்புகின்றது. ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான பொதிகளை அப் பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கு அனுப்பப்படுகின்றன.

இராணுவச் சோதனைச் சாவடிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. மருத்துவப் பொருள்கள் சோதனைச் சாவடிகள் மூலம் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. தேவையான மருந்துகளைக் கொண்டு செல்ல அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை.

கத்தோலிக்க உதவி நிறுவனமான கரித்தாஸ் தன்னால் முடிந்தளவு உதவிகளைச் செய்கின்றபோதும் கட்டுப்பாடுகளால் திருச்சபையும் மனிதாபிமான அமைப்புக்களும் உதவியை மேற்கொள்ள முடியாமல் விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளால் கடுமையான இடையூறுகளை எதிர்நோக்கியுள்ளனர் என்றார் அவர். (ச-5)


'கல்வி உலகின் கலங்கரை விளக்கு'

**வள்ளுவர் அக்கடமி**

**பரிசில் நாள் நிகழ்வு - 2008**

இடம் :- நிறுவன அரங்கு

காலம் :- 22.08.2008 வெள்ளி, காலை 9.30 மணி

ஆசி வழங்கல் :- வேதாகம வித்துவ சிரோன்மணி கிரிஜாலங்கரமணி சிவசிறி ரவீந்திரராஜ குருக்கள்

*தலைமை*

*திரு. E.A. ஜெயன் (இயக்குநர்)*

*பிரதம விருந்தினர்*

*திரு. க. தேவராஜா*

*(பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*

*சிறப்பு விருந்தினர்*

*திரு. ந. விஜயசுந்தரம்*

*(பிரதம ஆசிரியர், வலம்புரி பத்திரிகை, யாழ்ப்பாணம்)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பலாலி வீதி, உரும்பிராய். | வள்ளுவர் அக்கடமி கல்விச் சமூகம்

(C-14222)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.